.RESA SATHA[illegible]

(WITH NOTES)

PRESCRIBED TAMIL TEXT FOR FIFTH FORM

(GROUP A.)

Edited by

P. K. SREENIVASACHARIAR,

Senior Tamil Pandit, Voorhees C[illegible]

Lecturer, Central Jail, Vellore,

and Author of Ma[illegible]

Tamil works.

[*Fourth Edition : Revised and enlarged.*]

PRINTED AT THE S. V. PRESS VELLORE.

Copy Right]

1917

[As Four

புஸ்தகப் பிரகடனம்.

		அ.	ப.
1.	வில்லிபுத்தூரார் பாரதம், கிருஷ்ணன் தூது சர்க்கம் ...	4	0
2.	ஷை ஷை பொழிப்புரையுடன் ...	10	0
3.	நாலடியார்: குறிப்புரையுடன்	8	0
4.	ஆத்திசூடி நீதிகதைகள் (இரண்டாம் பதிப்பு)	8	0
5.	இரக்ஷகர் சரித்திரமும், பவுல்சரித்திரமும் ...	8	0
6.	பிரகலாதாழ்வான் சரிதை (இரண்டாம் பதிப்பு)	6	0
7.	ஔவை சரித்திரம்	6	0
8.	முராஹரி: சிறந்த நவீனகதை	5	0
9.	சம்பகமாலினி: சிறந்த நவீனகதை (இரண்டாம் பதிப்பு)	4	0
10.	குலசேகரன் ஷை	4	0
11.	மார்க்கண்டேய சரிதம் (இரண்டாம் பதிப்பு)	4	0
12.	விசயத்தவசியும், சிவவேடனும் ...	4	0
13.	இடைக்காடர் திருவள்ளுவர் சரித்திரம் ...	4	0
14.	தசரதராமசதகம் (இராமாயண சரித்திரம்; விருத்தத்தால் ஆகியது)	3	0
15.	ஸ்ரீவாமன சரித்திரம்	3	0
16.	குமரேசசதகம்: ஸாரமாகத் தேர்ந்தெடுத்த செய்யுள்களின் திரட்டு; அரும்பதவுரையுடன் (நான்காம் பதிப்பு)	4	0

ஸ்ரீ

குருபாததாசர் இயற்றிய

குமரேச சதகம்.

(கவர்ன்மெண்டாரால் ஐந்தாம் பாரத்துக்குப் பாடமாகக் குறிக்கப்பட்டது)

[அரும்பதவுரையுடன்]

வேலூர் காலெஜ் தமிழ்ப்பிரதமபண்டிதரும்,

வேலூர் ஸெண்ட்ரல் சிறைச்சாலையில் உபந்யாஸகரும்,

பலதமிழ்நூல்களின் ஆசிரியருமாகிய

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால்

வேலூர்

சந்திர விநாயகர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

நான்காம் பதிப்பு]   1917   [காபி ரைட்

Note.

The price of the book has been a little bit enhanced owing to the scarcity of paper and costly printing due to the neatness of execution and rapid work. Further the edition has been enlarged and revised.

P. K. S.

முகவுரை

அரிய பெரிய நீதிகளையும் மற்றுஞ்சில விஷயங்களையும் சிறுவர்க்கு ஏற்ற எளிய நல்ல செய்யுள்நடையில் தெரிவிக்கும் சிறந்த நூலாகிய இக்குமரேச சதகம், பல சிறுபள்ளிக்கூடங்களிற் கற்பிக்கப்பட்டுவருதல் யாவரும் அறிந்ததேயாம். இந்நூல்கற்பிக்கப்படுதல் மிகவும் நன்றே. ஆயின், இச்சிறந்த நீதிநூல் கற்பிக்கப்படும் முறையோ குறையுற்றிருக்கின்றது: அஃதாவது இந்நூலுக்குத் தக்க உரையின்மையாலோ பிறகாரணங்களாலோ மாணாக்கர்கள் பொருளறியாமற் செய்யுள்களைப் பாடம்பண்ணும்படி கற்பிக்கப்படுதலேயாம்.

இக்குறையோடு, பிழையில்லாத நல்ல சுத்தப்பதிப்புப்புஸ்தகம் தக்க உரையுடன் கூடியது கிடைக்காமல், அச்சுக்கு ஏற்காத விகாரமான காகிதமும் பிழைகள் மலிந்த விரும்பத்தகாத அச்சும் சிறவாத உரையும் உள்ள புஸ்தகம் கிடைத்தலால் ஆகுங் குற்றங்குறையுஞ் சேர, இந்நூற்படிப்பு எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருக்குமென்பது யாவரும் அறியக்கூடியதே.

இங்ஙனம் இந்நூற்கல்வி மிகவும் சீர்கேடு அடைந்துள்ள நிலையில், அறிஞர் சிலர், இவற்றையெல்லாம் ஆலோசித்து, குற்றங் குறைகள் அகன்றால் இந்நூற்கல்வி சிறக்குமென அறிந்து, நீதிநூற்படிப்பு முக்கியமாகப் பள்ளிக்கூடங்களில் இருக்கவேண்டுமென்றும், மற்றும், பெற்றோர்கள் தம் மக்கள் இந்நூலையும் வேறு சில நூல்களையும் படிக்கவேண்டுமென்று விரும்புதலின், அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுதற்காகவும் இந்நூல் பாடபுத்தகமாகவேண்டுமென்றுங் கருதி, என்னை அபிமானித்து இந்நூலையும் மற்றுஞ்சில நூல்களையும் தக்க அரும்பதவுரையோடு நல்ல சுத்தப்பதிப்பாக வெளியிட்டுத்தருதல் நலமென அன்புடன் உரைத்தமையின், அவர்களதுகருத்திற்கிசைய இந்நூலைச்சென்ற 1912-ம் வருடத்திலும் 1914-ம் வருடத்திலும், இவ்வருடத்தின் முதலிலும் முறையே முதற் பதிப்பும், இரண்டாம் பதிப்பும், மூன்றாம் பதிப்புமாக வெளியிடலானேன். இது நான்காம் பதிப்பாகும். இதில், முற்பதிப்பில் இல்லாத சில விஷயங்களைப் பொருள்விளக்கத்திற்காக வேண்டிச் சேர்த்திருக்கின்றேன்; பிற சில சீர்திருத்தங்களும் உண்டு.

இப்புத்தகத்தில், சிறுவர் கற்றற்கு ஒவ்வாத சிருங்காரரசப் பிரதானமான விஷயங்களும், மற்றுஞ்சில இடங்களும் அடங்கிய பாடல்கள் அறவே விலக்கப்பட்டன.

செய்யுள்களுக்குப் பதவுரை கருத்துரை முதலியனவெல்லாம் விவரமாகச் சேர்த்தால், அதனால் படிப்பவர்க்கு நூல் மிக எளிதாயிருக்குமாயினும், அங்ஙனஞ்செய்தலில் கற்பவர்கள் யாதொரு தன்முயற்சியுமின்றி வெறுங் குருட்டுப்பாடமாக நெட்டுருச்செய்து அதனால் அறிவு நிரம்பப்பெறாரென்று அறிஞர் பலர் கருதுகின்றனராதலின், இன்றியமையாததும், சுருக்கமும், கூடியவரையில் தெளிவுமான அரும்பதவுரைமாத்திரம் எழுதிச்சேர்த்திடலானேன். கடினமான சிற்சில இடங்களிற் கருத்துரையும், சிற்சில இடங்களில் மேற்கோள்களும் காட்டப்பட்டுள்ளன. கஷ்டமான சந்திகளைப் பிரித்துக் காட்டியிருக்கிறேன்.

இந்நூலிலுள்ள செய்யுட்கருத்துக்கள் மிகச்சிறந்தனவாதலின், பெரிய கலாசாலைகளிற் கற்கும் மாணாக்கர்களும் பிறருங் கூட இந்நூலைப் படித்தறிதல் தகும்.

கல்வித்துறையிலுள்ள அதிகாரிகளும், சிறு பள்ளிக்கூடங்களிலும் பெரிய கலாசாலைகளிலுமுள்ள உபாத்தியாயர்களும், தமிழ்ப் பண்டிதர்களும் இப்புத்தகத்தை அபிமானித்து எனக்கு ஊக்கந்தரும் உதவியைப் புரிவார்களென எதிர்பார்க்கின்றேன்.

கனம்பொருந்திய கவர்ன்மெண்டார் இப்புத்தகத்தை ஐந்தாம் பாரத்துக்குப் பாடமாக நியமித்ததற்காக அன்னோர்க்கு வந்தனஞ் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்நூற்பதிப்பு இன்னுஞ் சீர்திருந்துதற்காக உபாத்தியாயர்களும், மற்றும் அறிஞர்களும் தகுதியாக வெளியிடும் அபிப்பிராயங்களெல்லாம் வந்தனத்தோடு ஏற்றுக்கொள்ளப்படும். அடுத்த பதிப்பில் அத்தகைய சீர்திருத்தஞ் செய்யலாகும்.

வேலூர்
1917ஆம் ஆகஸ்ட் 7௳ } டி. கே. ஸ்ரீ.

ஸ்ரீ

கடவுள் துணை.

குமரேச சதகம்.

இந்நூல், 'குமரேச' என்ற சுப்பிரமணியக் கடவுளது திருநாமம் அமைத்துப் பாடப்பெற்ற நூறுசெய்யுள்கொண்ட ஒரு பிரபந்தமாதலால், 'குமரேசசதகம்' என்றபெயருடையதாயிற்று. இந்தநூலின் செய்யுள் ஒவ்வொன்றிலும், "மயிலேறி விளையாடு குகனே புல்வயல்நீடு மலைமேவு குமரேசனே" என்பது மகுடமாக அமைக்கப்பட்டிருத்தல் காண்க. 'குமரேச சதகம்' என்ற தொடர்—குமரேசனைப்பற்றிய சதகமெனவும், குமரேசனது சம்பந்தமான [குமரேசன் விஷயமான] சதகமெனவும் விரியும். குமாரேச என்பது குமரேச என விகாரப்பட்டது; அது, குமார—ஈச என்று பிரியும்; சுப்பிரமணியனாகிய கடவுள் எனப் பொருள்படும். குமாரன் என்ற வடமொழிப்பெயர்—கு + மார என்று பிரிந்து, (கு—குற்சிதம், மாரன்—மன்மதன்) மன்மதனையுங் குரூபமுடையவ னென்னும்படி யாக்குகின்ற கட்டழகுடையவனென்று காரணப்பொருள்படும்.

சதகம் என்பது-தொண்ணூற்றாறுவகைத் தமிழ்ப்பிரபந்தங்களில் ஒன்று. அதன் இலக்கணம் - அகப்பொருளொன்றன் மேலாவது புறப்பொரு ளொன்றன்மேலாவது நூறு செய்யுள் கூறுதல். (அகப்பொருள் - சிற்றின்பம். புறப்பொருள் - மற்ற விஷயங்கள்.) இந்நூல்-பலவகை நீதிகளையும், சில சரித்திரங்களையும், மற்றும் பலவகை இயல்புகளையும் விளக்குதலால், புறப்பொருளின்மேற் கூறியதாம். சதம் - நூறு: அது, 'க' என்னும் பிரத்தியயம் பெற்று, சதகமென நின்றது.

இந்நூல் - ஆசிரிய விருத்தத்தால் அமைந்தது; திருப்புல்வயல் என்ற தலத்தில் மலையின்மீது எழுந்தருளியுள்ள பால சுப்பிரமணியரென்னுந் திருநாமமுடைய முருகக்கடவுளின்மேற் பாடப்பட்டது. திருப்புல்வயல் என்ற தலம் சோழநாட்டிலுள்ளதென்று இந்நூற் செய்யுள்கள் சிலவற்றால் அறியலாம். சுப்பிரமணிய சுவாமியினிடத்து மிக்க பக்தியோடு அப்பெருமானைப் பிரபந்தத்தலைவனாக வைத்துப் பாடப்பட்ட இந்நூல், தத்துவ ஞானத்தையும் சிறந்த பதவிகளையும் முடிவில் முத்தியையுந் தரவல்லதென்ற தன்மையை, "பன்னரிய புல்வயலில் வால குமரேசர்மேற் பரிந்து குருபாததாசன் பாங்கான தமிழாசிரிய விருத்தத்தி னறைபாட லொருநூறும் நாடி, நன்னயமதாகப் படித்தபேர் கேட்டபேர் நாடோறுங் கற்றபேர்கள், ஞானயோகம் பெறுவர் பதவியாவும் பெறுவர் நன்முத்தியும் பெறுவரே" என்று இந்நூலின் ஈற்றுச்செய்யுளிற் கூறியதுகொண்டு அறிக.

நூலாசிரியர்

இக்குமரேசசதகத்தை இயற்றியவர் குருபாததாசர் என்பது மாத்திரம் இந்நூலின் ஈற்றுச்செய்யுளினால் விளங்குகின்றது. இவருடைய சரித்திரம் முதலிய விவரம் யாதும் தக்க ஆதாரத்தோடு விளங்கவில்லை. இவர்காலம் ஏறக்குறைய 160-வருஷங்களுக்கு முன்பு என்பர். இவர் சுப்பிரமணியபக்தியை மிகுதியாக வுடையவர் என்பது, இந்நூலினால் நன்கு விளங்கும். இவர்மதம் சைவமென்பது, இந்நூலிலுள்ள செய்யுள்கள்பலவற்றால் வெளிப்படையாகத் தெரிகின்றது.

இந்நூலின் சம்பந்தமாகப் புலவர்கள்சிலர் தெரிவிப்பது:— 'புல்வயல்' என்பது, இப்பொழுது புதுக்கோட்டை ஸமஸ்தானத்தைச் சேர்ந்துள்ளதோரூர். இதில் ஒருமலையும், அதில் முருகக் கடவுளின் ஆலயமும் உண்டு. அவ்வாலயம் மிகப் பிரசித்தி பெற்றது. அதற்கு அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழும் உண்டென்பர். இவ்வூரிலே இருந்து குமரேசசதகஞ்செய்த குருபாததாசருடைய இயற்பெயர், முத்துமீனாட்சிக்கவிராயர் என்

பது. பரம்பரைச் சைவவேளாளராகிய இப்புலவர், மேற்கூறிய பாலசுப்பிரமணியக்கடவுளின்மேல் இக்குமரேசசதகம் ஒன்றையேயன்றி, இன்னும் பல பிரபந்தங்களையும் செய்தனரென்று கேள்வி. இவரது புத்திரபரம்பரையோர் மேற்குறித்த புல்வயலிலும், இவரது புத்திரியின்பரம்பரையோர் சேலத்தைச்சேர்ந்த சார்வாய் என்னும் ஊரிலும் இப்பொழுதும் இருக்கின்றார்கள். மேற்குறித்த சார்வாய்என்னும்ஊரில் தொண்ணூற்றுச்சொச்சம் பிராயம்வரையில் இருந்து சமீபகாலத்தில் தேகவியோகமடைந்தவரும், சிறந்த தமிழிலக்கிய இலக்கணங்களில் மிக்க பரிசயமுள்ளவரும், தனிச்செய்யுள்கள் செய்தலிலும் பிரபந்தங்களியற்றுதலிலும் வசைகவிபாடுதலிலும் மிக்கதேர்ச்சியுடையவருமாகிய கதிர்வேற்கவிராயர் என்பவர், இவரது புத்திரி பரம்பரையோர். கடம்பர்கோவில் மதுரைநாயகம்பிள்ளையென்னுஞ் சிறந்த புலவரும், இவர்பரம்பரையினரே.

இந்நூலாசிரியர், தமிழ்ப்பாஷையினிடத்து மிக்கஅபிமானமுடையவர். இவரது செய்யுள் நடை, எளியதும் இனியதுமாகவுள்ளது.

[காப்பு]

பூமேவு புல்லைப் பொருந்து குமரேசர்தம்மேல்
தேமேவிய சதகஞ் செப்பவே,—கோமேவிக்
காக்குஞ் சரவணத்தான், கம்பதும்பத் தைந்துகரக்
காக்குஞ்சரவணத்தான் காப்பு.

'காப்பு' என்பது, தாம் தொடங்குகின்ற நூல் இடையூறில்லாமல் இனிது முடிதற்பொருட்டு (உயர்ந்தோர் வழக்கத்தின்படியே) கவியினாற் கூறப்படும் கடவுள்வணக்கச்செய்யுள். இங்ஙனம் கடவுள்வணக்கங் கூறுவதனால், எடுத்த காரியம் இனிது முடியுமென்பது கருத்து. இக்காப்பு, தம்மைச் சரணமடைந்தவர்கள் தொடங்கும் தொழில்களுக்கு வரும் விக்கினங்களை

[இடையூறுகளை] ப்போக்குதலாலும், தம்மையடையாது அகங்கரித்தவர்களுக்கு விக்கினங்களை ஆக்குதலாலும் விக்கினேசுவரரென்னுந் திருநாமம்பெற்றுள்ளவரும், பரமசிவனது மூத்ததிருக்குமாரருமான ஸ்ரீ விநாயகமூர்த்தியையும், அவரது திருத்தம்பியாரான சுப்பிரமணியமூர்த்தியையும் பற்றியது.

(இதன்பொருள்:) பூ மேவு-அழகுபொருந்திய, புல்லை-திருப்புல்வயல் என்ற தலத்தில், பொருந்து-எழுந்தருளியுள்ள, குமரேசர்தம்மேல்-குமாரசுவாமியின்மீது, தேம் மேவிய சதகம் செப்ப-இனிமைபொருந்திய சதகம்என்னும் பிரபந்தத்தைப் பாடுதற்கு, கோ மேவி-தலைமைபொருந்தி, காக்கும்- (எல்லாவுயிர்களையும்) பாதுகாக்கிற, சரவணத்தான்-சரவணமென்னும் நாணற்காட்டில் தோன்றியதனால் சரவணபவன் என்னுந் திருநாமமுடைய முருகக்கடவுளும், கம்பம்-அசையும்இயல்புடையதும், கும்பத்து-குடம்போன்ற மஸ்தகத்தையுடையதும், ஐந்து கரம் - ஐந்துகைகளையுடையதும், கா- சோலையில் சஞ்சரிப்பதுமாகிய, குஞ்சரம்—யானைபோன்ற, வண்ணத்தான்-வடிவத்தை யுடையவனாகிய விநாயகக்கடவுளும், காப்பு-பாதுகாவலாவர்: (என்றவாறு.)

புல்வயல் என்பது, புல்லை என மருஉவாயிற்று. கோ மேவி காக்கும்-தேவலோகத்தை விரும்பிப் பாதுகாக்கின்ற எனினுமாம்; தேவசேனாதிபதியாய் அசுரர்களை அழித்துத் தேவர்களைக் காத்ததனால்; கோ - தேவலோகம். குமாரக்கடவுள் நாணற்காட்டில் தோன்றிய வரலாறு கேட்டறிக; விரிப்பின் பெருகும். கம்பம் என்பதற்கு - கம்பத்தில் கட்டிவைக்கத்தக்க என்றும் பொருள்கொள்ளலாம்; மதயானையென்பதுகருத்து. இயல்பாகிய நான்கு திருக்கரங்களோடு யானைவடிவத்துக்கு உரியதான துதிக்கையுங் கூட ஐந்துகரங்கள் காண்க. ஐந்து கரம் கா- ஐந்து கைகளாகிய ஐந்துகற்பகவிருட்சங்களையுடையவென்றுங் கொள்ளலாம்; கா-சோலை; இங்கே மரத்தைக் குறிக்கலாம். கருதியவை தருதலால், கரங்கள், கற்பக மெனப்பட்டன. விக்கினநிவிருத்தியின்பொருட்டு விநாயகரை முதலிற் கூறுதல் பொருந்துமாயி

னும், இந்நூலாசிரியர் முருகக்கடவுளை முந்நிலைவைத்தது, அவரது சுப்பிரமணியபக்தி விசேஷத்தினால் என்க. அன்றியும், விநாயகர் வழிபடுகடவுள்மாத்திரமேயாக, சுப்பிரமணியர் அதனோடு இந்நூலுக்கு எற்புடைக்கடவுளுமாய் முன்னிற்றற்கு உரிமைபெறுதல் காண்க.

இச்செய்யுளில் பின்னிரண்டடியில் 'காந்தஞ்சரவணந்தான்' என்றதுவரையில் எழுத்து ஒத்திருக்கச் சொல்லும் பொருளும் வேறுபட்டது, மடக்கு என்னும் சொல்லணி; இது, வடமொழியில் 'யமகம்' எனப்படும்.

[அவையடக்கம்]

மாரிக்கு நிகரென்று பனி சொரிதல்போலவும்,
மலைக்கு நிகரென்று சிறுபெண்
மணல்வீடு கட்டுவதுபோலவும், சந்திரன்முன்
மருவு மின்மினிபோலவும்,
பாருக்குள் நல்லோர்முனே பித்தர் பலமொழி
பகர்ந்திடுஞ் செயல்போலவும்,
பச்சைமயி லாடுதற் கிணையென்று வான்கோழி
பாரி லாடுதல்போலவும்,
பூரிக்கு மினிய காவேரிக்கு நிகரென்று
போது வாய்க்கால்போலவும்,
புகல் சிப்பி முத்துக்கு நிகராப் பளிங்கைப்
பொருந்த வைத்ததுபோலவும்,
வாரிக்குமுன் வாவி பெருகல்போலவும், இன்சொல்
வாணர்முன், உகந்து புல்லை
வாலகுமரேசர்மேற் சதகம் புகன்றனன்;
மனம்பொறுத் தருள் புரிகவே.

அவையடக்கம்-கற்றோர்சபைமுன் கவி தன்னைத் தாழ்த்திக் கூறுதல். மாரி - மழை. நிகர் - ஒப்பு. மருவும் - பொருந்திய.

பாருக்குள் - பூமியில். பகர்ந்திடும் - பேசும். இணை - ஒப்பு. பூரிக்கும் - பெருகும். போது - செல்லுகிற. புகல் - (சிறப்பித்துச்) சொல்லப்படும். பளிங்கு-படிகக்கல். பொருந்த - (சமானமாகப்) பொருந்த. வாரி—வாரிதி: கடல். வாவி - தடாகம். இன் சொல் வாணர் - இனிய சொற்களையுடைய கவிவாணர்; கவிஞர் என்க. வால என்பது, பால என்னுஞ் சொல்லின் விகாரம். புகன்றனன்- கூறினேன். அருள் புரிக - கிருபைசெய்து ஏற்றுக்கொள்க.

நூல்.

[குமரேசர் மகிமை]

பூமிக்கொ ராறுதலையாய் வந்து, சரவணப்
பொய்கைதனில் விளையாடியும்,
புனிதர்க்கு மந்த்ரவுபதேசமொழி சொல்லியும்,
போதனைச் சிறையில் வைத்தும்,
தேமிக்க வரியரப் பிரமாதிகட்கும்
செயிக்கமுடியா வசுரனைத்
தேகங் கிழித்து வடிவேலினு லிருகூறு
செய் தமரர்சிறை தவிர்த்தும்,
நேமிக்கு ளன்ப ரிடருற்ற சமயந்தனில்
நினைக்குமுன் வந்துதவியும்,
நிதமு மெய்த்துணையாய் விளங்கலால், உலகினுனை
நிகரான தெய்வ முண்டோ?
மாமிக்க தேன் பருகு பூங்கடம் பணியு மணி
மார்பனே! வள்ளி கணவா!
மயிலேறி விளையாடு குகனே! புல்வயனீடு
மலைமேவு குமரேசனே!

பொய்கை-மானிடர் ஆக்காத நீர்நிலை. புனிதற்கு-பரிசுத்த மூர்த்தியாகிய சிவபிரானுக்கு. முருகக்கடவுள் பிரமனைச்சிறையில்

வைத்ததும், தம் தந்தையாகிய சிவபிரானுக்குப் பிரணவமந்திரோபதேசஞ்செய்ததும் கேட்டறிக. * போதன்- (திருமாலின் நாபித்) தாமரைமலரில் தோன்றிய பிரமதேவன். சிறை- காவல். தேமிக்க-தேவர்களிற்சிறந்த; அல்லது, தெய்வத்தன்மை மிகுந்த. அரி - திருமால். அரன் - சிவபிரான். அரியரப் பிரமாதிகட்குஞ் செயிக்கமுடியா அசுரன் - சூரபதுமன். வடிவேல் - கூர்மையான வேலாயுதம். கூறு - பாகம். அமரர் - தேவர். நேமி - பூமி. அன்பர் - பக்தர்கள். இடர் - துன்பம் நிதமும் - எந்நாளும். மா - வண்டு. பூ கடம்பு அணியும் - கடப்பமலர்மாலையை அணிந்த. அணி- அழகு. குகன்—குஹன்; அஞ்ஞானவிருளைப்போக்குபவன்; இது, முருகக்கடவுளது திருநாமம். புல்வயல் - திருப்புல்வயல் என்னுந் தலத்தில். நீடு மலை-பெரியமலையின்மேல். மேவு-எழுந்தருளியிருக்கின்ற.

[அந்தணரியல்பு]

குறையாத காயத்ரியாதி செபமகிமையும்,
கூறு சுருதிப் பெருமையும்,
கோதிலா வாகம புராணத்தின் வளமையும்,
குலவு யாகாதி பலவும்,
முறையா நடத்தலால், சகல தீவினைகளையும்
முளரிபோலே தகிப்பார்;
முதன்மைபெறு சிலைசெம்புபிருதுவிகளிற் றெய்வ
மூர்த்த முண் டாக்குவிப்பார்;
நிறையாக நீதிநெறி வழுவார்க ளாகையால்,
நீண்மழை பொழிந்திடுவதும்,
நிலமது செழிப்பதும், அரசர்செங்கோல்புரியும்
நிலையும், மாதவர்செய் தவமும்,

---

* இவ்வரலாறுகளை, யான் எழுதி வெளியிட்டுள்ள 'பிரணவப்பொருளறியாத பிரமன்' என்னும் வசனநூலில் விவரமாகக் காணலாம்.

மறையோர்களாலே விளங்கும்; இவ்வுலகத்தின்
மானிடத் தெய்வ மிவர்காண்!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

காயத்திரி-ஓர் மந்திரம். கூறு-(சிறப்பித்துச்) சொல்லப்படுகின்ற. சுருதி-வேதம். சுருதி பெருமையும்-வேதப்பெருமையுணர்ந்த சிறப்பும். கோது இலா - குற்றமில்லாத. ஆகமம் - சமயநூல். ஆகமம் புராணத்தின் வளமையும்-ஆகமபுராணங்களின் பொருளைத் தேரும் சிறப்பும். குலவு - விளங்குகின்ற. முளரி - அக்கினி. சிலை-கல். பிருதிவி - மண். தெய்வம் மூர்த்தம் - தெய்வஸ்வரூபம். நெறி-வழி. வழுவார்கள்-தவறார்கள். நீள் - மிக்க. செங்கோல்- நேர்மையான அரசாட்சி. மறையோர் - வேதம்வல்ல அந்தணர். மானிடத்தெய்வம் - மனிதர்களில் தெய்வத்தன்மையுள்ளவர்கள். பூதேவர் என்பது, அந்தணர்க்கு ஓர் பெயர்.

[அரச ரியல்பு]

குடிபடையி லபிமானம், மந்திராலோசனை,
குறிப்பறிதல், சத்ய வசனம்,
கொடை,நித்தமவரவர்க்கேற்றமரியாதை,பொறை,
கோடாத சதுருபாயம்,
படிவிசாரணையொடு, ப்ரதானி தளகர்த்தரைப்
பண்பறிந்தே யமைத்தல்,
பல்லுயிரெலாந் தன்னுயிர்க்கு நிகரென்றே
பரித்தல், குற்றங்கள் களைதல்,
துடிபெறு தனக்குறுதியான நட்பு, அகமின்மை,
சுகுணமொடு, கல்வி யறிவு,
தோலாத காலமிட மறிதல், வினைவலிகண்டு
துஷ்டநிக்ரக சௌரியம்,
வடிவுபெறு செங்கோல் நடத்திவரு மரசர்க்கு
வழுவாத முறைமை யிதுகாண்;
மயிலேறி........குமரேசனே!

குடி - பிரஜைகள். படை - படைவீரர், சைனியம். மந்திர ஆலோசனை-(இராஜாங்ககாரியங்களை) இரகசியமாக ஆலோசித்தல். நித்தம்-நித்யம். பொறை-பொறுமை. கோடாத-கோணாத. சதுர் உபாயம்-(அரசர்க்கு வேண்டிய)நால்வகை உபாயங்கள்; அவை-ஸாமம், தானம், பேதம், தண்டம் என்பன. படி-பூமி. தளகர்த்தர்-சேனைத்தலைவர். பண்பு-குணம், ஸ்வபாவம். அமைத்தல்-ஏற்படுத்தல். பல் உயிர் எலாம் தன் உயிர்க்கு நிகர் என்றே பரித்தல்-மன்னுயிரைத் தன்னுயிர்போற் கருதிக் காத்துத் தாங்குதல். துடிபெறு-மேன்மையுடைய. நட்பு-நண்பர்களை உடைமை. அகம் இன்மை-நான் என்னுஞ் செருக்கு [அஹங்காரம்] இல்லாமை. சுகுணம்-நற்குணம். இதன் எதிர்மொழி - துர்க்குணம். துஷ்ட நிக்ரஹம் - தீயோர்களைத் தண்டித்தலும், கொல்லுதலும். இதன் எதிர்மொழி - சிஷ்டபரிபாலனம். வடிவு பெறு - அழகுடைய. வழுவாத - தவறாத. முறைமை - உரிய நிலைமை, லக்ஷணம். (3)

[வணிக ரியல்பு]

கொண்டபடிபோலும் விலைபேசி, லாபஞ்சிறிது
கூடிவர நயமுரைப்பார்;
கொள்ளு மொருமுதலுக்கு மோசம் வராதபடி
குறுகவே செலவு செய்வார்;
வண்டப் புரட்டர்தாம் முறிந்து பொன்னடகு
வைக்கினுங் கடனீந்திடார்;
மருவுநாணயமுளோர் கேட்டனுப்பினும், அவர்
வார்த்தையி லெலாங் கொடுப்பார்;
கண்டெழுது பற்றுவரவின் மயிர் பிளந்தே
கணக்கி லெழுவாகிலும் விடார்;
காசு வீணிற் செலவிடார்; உசிதமானதிற்
கன திரவியங்கள் விடுவார்;
மண்டலத்தூடு கன வர்த்தகஞ் செய்கின்ற
வணிகர்க்கு முறைமை யிதுகாண்;
மயிலேறி விளையாடு........குமரேசனே!

குறுகவே - சொற்பமாகவே. வண்டப்புரட்டர் - துஷ்டத் தன்மையுள்ள வஞ்சகர்கள். வண்டத்தனம் - துடுக்குத்தனம்; இச்சொல், இந்நூலின் 75-ஆம் செய்யுளிலும் 'வண்டப்பரத்தையர்' என்று பயின்றுள்ளது. புரட்டர் - பொய்பேசுபவர்; சொன்னசொல் தவறுவோர்; வாக்குநாணயமில்லார்; வாயினால் டம்பம் பண்ணுபவர்; மோசக்காரர். முறி தந்து - சீட்டு எழுதிக் கொடுத்து. அடகு - ஈடு. மருவு - பொருந்திய. நாணயம்-சொன்னசொல் தவறாது நடத்தல்; நம்பிக்கைக்கு இடமான தன்மை. பற்று வரவு - கொடுக்கல் வாங்கல். பற்று - தம்மிடத்தினின்று பிறர் பொருளைப் பெற்றுக்கொண்ட விவரங் குறிப்பது. வரவு - பிறரிடத்தினின்று தமக்குப் பொருள் வந்த விவரங் குறிப்பது. மயிர்பிளந்தே - மயிரை இருபிளவாகக் குறுக்கே பகிர்ந்தவளவு நுண்ணிய தொகையையுங் காட்டி. அணு - மிகச்சிறிது. உசிதம்- தகுதி, பயனுள்ளது. இதன் எதிர்மொழி - அநுசிதம். மண்டலத்தூடு - உலகத்திலே. (4)

[வேளாளரியல்பு]

நல்ல தேவாலயம் பூசனை நடப்பதும்,
நாடோறும் மழைபொழிவதும்,
நாடிய தபோதனர்கண் மாதவம் புரிவதும்,
நவில்வேத வேதியரெலாம்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதும்,
தொல்புவி செழிக்குநலமும்,
சுபசோபனங்களும், கொற்றவர்கள் செங்கோல்
துலங்கு மனுநெறி முறைமையும்,
வெல்லரியசுகிருதமொடுவர்த்தகர்கள்கொள்விலையும்,
விற்பனையும், மிக்க புகழும்,
மிக்கவதிகாரமும், தொழிலாளர் சீவனமும்,
வீரரண சூரர் வலியும்,
நல்லமைகள் சகலமும், வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவனன்றோ!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

நாடோறும் - நாள்தோறும்; "குறில்செறியாலன" என்னும் சூத்திரம்பார்க்க. நாடிய - கடவுளைத் தியானிக்குந் தன்மையுள்ள. தபோதனர்கள் - தவத்தையே செல்வமாகவுடையவர்கள்; முனிவர்கள் நவில் - (சிறப்பித்துச்) சொல்லப்படுகிற. வேத வேதியர்- வேதம்வல்ல அந்தணர்; அன்றி, வேதம் நவில் வேதியர் என்று மாற்றி - வேதமோதுகின்ற அந்தணர் எனினுமாம். சொல் அரிய - சொல்லுதற்கு அரிய சிறப்புடைய. கருமங்கள் - நற்காரியங்கள். தொல் புவி - பழைய பூமி. நலம் - நன்மை. சுப சோபனங்கள் - பலவகையான மங்களகாரியங்கள்; மங்களகரமான கல்யாணங்கள். கொற்றவர்கள் - வெற்றியுடைய அரசர்கள்; இது, கொற்றம் என்பதன் அடியாக வந்தது. துலங்கும் - விளங்கும். மனு நெறி முறைமை - மநுதர்ம சாஸ்திரத்திற் கூறப்பட்ட சன்மார்க்கத்தின் கிரமம்; மனுநீதி தவறாத தன்மை. வெல் அரிய - ஜயித்தற்கு அருமையான; ஒப்பற்ற என்றபடி. சுகிருதம் - நல்வினை, புண்ணியம். இதன் எதிர்மொழி - துஷ்கிருதம். சீவனம் - பிழைப்பு. ரணம் - போர். வேளாளர் - உழுது பயிரிட்டு உணவுப்பொருள்களைத் தரும் உபகாரிகளாகிய சூத்திரர். மேழி - கலப்பையின் கைப்பிடி; இது, இங்கு உழவுத்தொழிலைக் குறிக்கும். விளைவ - உண்டாவன. (5)

[பிதாக்கள்]

தவமதுசெய்தே பெற்றெடுத்தவன் முதற்பிதா;
தனைவளர்த்தவ னொருபிதா;
தயையாக வித்தையைச் சாற்றினவ னொருபிதா;
சார்ந்த சற்குரு வொருபிதா;
அவமறுத் தாள்கின்றவர சொருபிதா; நல்ல
ஆபத்து வேளைதன்னில்
அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோ னொருபிதா;
அன்புள முனோ னொருபிதா;
கவளமிடு மனைவியைப் பெற்றுளோ னொருபிதா;
கலிதவிர்த்தவ னொருபிதா;
காசினியி லிவரை நித்தம் பிதா வென்றுளம்
கருதுவது நீதியாகும்;

மவுலிதனின் மதியரவு புனைவிமல ருதவுசிறு
மதலையென வரு குரு பரா!
மயிலேறி விளையாடு.........குமரேசனே!

வித்தைதனை சாற்றினவன் - கல்வியைச் சொல்லிக்கொடுத்த ஆசிரியன். சார்ந்த சத்குரு - சிறப்பமைந்த நல்ல (தத்துவஞானத்தை உபதேசித்த) ஆசிரியன். அவம் - தீங்குகள். நல்ல ஆபத்து - கொடிய துன்பம். அஞ்சல் - பயப்படாதே; எதிர்மறையொருமையேவல். உற்ற - நேர்ந்த. முன்னோன் என்பது, முன்னோன் எனத் தொகுத்தல்விகார மாயிற்று. முன்னோன் - தமையன். கவளம் - வாய்கொள்ளும் உணவு. கலி - தரித்திரம். காசினி - பூமி. நித்தம் - நித்யம்; எப்பொழுதும். உளம் - மனம். மவுலி - திருமுடி. மதி - சந்திரன். அரவு - நாகம். புனை - தரித்த. விமலர் - குற்றமற்ற சிவபிரான். உதவு - பெற்ற. சிறு மதலை - இளைய குமாரன். குருபரா - சிறந்த ஆசிரியனே! முருகக்கடவுள் ஒருகால் தம் தந்தையாகிய சிவபிரானுக்குப் பிரணவப்பொருளை உபதேசித்தனராதலால், அவரை, 'குருபரா' என விளித்தார்; அன்றியும், தமிழ்க்கு முதலாசிரியராகிய அகத்தியனார்க்குத் தமிழையும் தத்துவஞானத்தையும் உபதேசித்த தலைமையை உட்கொண்டு இங்ஙனம் விளித்தாரென்றுங் கொள்ளலாம். (6)

[ஒன்றை யொன்று பற்றியிருப்பன]

சத்தியந் தவறா திருப்பவ ரிடத்தினில்
சார்ந்து திருமாதிருக்கும்;
சந்ததந் திருமா திருக்கு மிடந்தனில்
தனது பாக்கிய மிருக்கும்;
மெய்த்தவரு பாக்கிய மிருக்கு மிடந்தனில்
விண்டுவின் களை யிருக்கும்;
விண்டுவின் களை பூண்டிருக்கு மிடந்தனில்
மிக்கான தயை யிருக்கும்;

பத்தியுட னினியதயை யுள்ளவ ரிடந்தனில்
பகர்தரும மிகவிருக்கும்;
பகர்தரும முள்ளவ ரிடந்தனிற் சத்ரு
பலாயனத்திற லிருக்கும்;
வைத்திசை மிகுந்ததிற லுள்ளவ ரிடத்தில் வெகு
மன்னுயிர் சிறக்கு மன்றோ!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

சார்ந்து - அடுத்துப்பொருந்தி. திருமாது - இலக்குமி. சந்ததம் - எப்பொழுதும். அவிடம் - அவ்விடம். மெய்த்து - நிச்சயம் பொருந்தி; நிச்சயமாக. விஷ்ணுவென்பது, விண்டுவெனத் திரிந்து நின்றது. களை—கலை - அம்சம்: இது, காந்தி, அழகு, ஒளி என்னும் பொருளையுந் தரும். மிக்கான - மிகுதியான. தயை - அருள். பகர் தருமம் - சிறப்பித்துச்சொல்லப்படும் அறம். சத்ரு பலாயனம் திறல் - பகைவர் புறங்காட்டியோடத்தக்க வலிமையும், தைரியமும். சத்ரு என்பதன் எதிர்மொழி - மித்திரன். இசை - புகழ்; இதன் எதிர்மொழி - வசை. வெகு மன் உயிர் சிறக்கும் அன்றோ - பலவாகிய நிலைபெற்ற ஜீவராசிகள் சிறந்து வாழுமன்றோ. (7)

[இவர்க்கு இவர் தெய்வமெனல்]

ஆதுலர்க் கன்னங் கொடுத்தவர்களே தெய்வம்;
அன்பான மாணுக்கருக்
கரிய குருவே தெய்வம்; அஞ்சினோர்க் காபத்
தகற்றினோனே தெய்வமாம்;
காதலுறு கற்புடைய மங்கையர் தமக்கெலாம்
கணவனே மிக்க தெய்வம்;
காசினியின் மன்னுயிர் தமக்கெலாங் குடிமரபு
காக்கு மன்னவர் தெய்வமாம்;
ஓதரிய பிள்ளைகட் கன்னைதந்தையர் தெய்வம்;
உயர்சாதி மாந்தர் யார்க்கும்

விடமேறு கோரத்தை அன்றடக்குவதலால்,
மிஞ்சவிட லாகாது காண்.
மைக்கினிய கண்ணி குறவள்ளி தெய்வானையை
மணஞ்செய்த பேரழகனே!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

வாய் முந்து துர்ச்சனர் - வாய்முந்திப் [பதறிப்]பேசுகிற துஷ்டஜனங்கள். துர்ச்சனர் என்பதன் எதிர்மொழி - சற்சனர். அகிருத்தியம் - தகாத செய்கை; இது, கிருத்தியம் என்பதன் எதிர்மொழி. ஆர்ப்பை - ஆரவாரத்தை கருதிய விசாரத்தை - கருத்திலுண்டாகிய கவலையை. பலிசை - [illegible]ாம்பெண். கடிது - கடுமையானது. மெய்க்கு இனிது அலா பிணி - தேகத்துக்குச் சுகந்தருவதல்லாத [இன்னாததாகிய] வியாதி. அவை உதாசீனத்தை - சபையிற் பிறர் பற்றின்றிக் கூறிய பழிமொழியை. வினை - தீவினை. கோரம் - கொடுமை. மைக்கு இனிய கண்ணி - மையிடப்பெற்று அதனால் அழகிய கண்களையுடையவள்; இனி, மை - மேகமெனக்கொண்டு, அதனினும் சிறந்த குளிர்ந்த கரிய கண்களையுடையவள் எனினுமாம். தெய்வானை - தெய்வயானை. (10)

[இதனை விளக்குவது இதுவெனல்]

பகல்விளக்குவ திரவி; நிசிவிளக்குவது மதி;
பார்விளக்குவது மேகம்;
பதிவிளக்குவது பெண்; குடிவிளக்குவ தரசு;
பரிவிளக்குவது வேகம்;
இகல்விளக்குவது வலி; நிறைவிளக்குவது நலம்;
இசைவிளக்குவது சுதி; ஊர்
இடம்விளக்குவது குடி; உடல்விளக்குவ துண்டி;
இனியசொல் விளக்குவ தருள்;
புகல்விளக்குவது கொடை; தவம்விளக்குவ தறிவு;
பூவிளக்குவது வாசம்;
பொருள் விளக்குவது திரு; முகம்விளக்குவது
புத்தியை விளக்குவது நூல்; [நகை;

மகம்விளக்குவது மறை; சொல்விளக்குவது நிசம்;
 வாவியை விளக்குவது நீர்.
மயிலேறி விளையாடு........குமரேசனே!

இரவி - சூரியன். நிசி - இராக்காலம். மதி - சந்திரன். பார் - பூமி. பதி - வீடு. 'பதி விளக்குவது பெண்'—"மனைக்கு விளக்கு மடவாள்" என்பது காண்க: இனி, பதி - கணவன் என்பாருமுளர். குடி - பிரஜைகள். பரி - குதிரை. இகல் - போர். நிறை - குணபூர்த்தி; இனி, நிறை - பிறரறியாமல் மனத்தில் அடக்கப்படுவது என்பாருமுளர்; "நிறையெனப்படுவது மறை பிறரறியாமை" என்பது காண்க. நலம் - நன்றி, சிறந்த அழகு. இசை - சங்கீதம். சுதி = சுருதி; சுருதிகூட்டலென்பது - முதல் நாதமாகிய ஷட்ஜத்தோடு பஞ்சமமென்னும் ஸ்வரத்தை மனோரஞ்சனமாம்படி சுத்தமாப் பொருத்துதல். குடி' - ஜனங்கள். புகல் - அடைக்கலம்புகுந்தவர். வாசம் - வாசனை. திரு - இலக்குமி. நகை - சிரிப்பு. மகம் - யாகம். மறை - வேதம். வாவி - குளம். (11)

[பிறப்பிட நன்மையால் நன்மைபெறுமை]

சிங்கார வனமதி லுதிப்பினும், காகமது
 தீஞ்சொல் புகல் குயிலாகுமோ?
திரையெறியும் வாவியிற் பூத்தாலுமே, கொட்டி
 செங்கஞ்ச மலராகுமோ?
அங்கானகத்திற் பிறந்தாலும், முயலானது
 ஆனையின் கன்றாகுமோ?
ஆண்மையாகிய நல்லகுடியிற் பிறந்தாலும்,
 அசடர் பெரியோராவரோ?
சங்காடு பாற்கடல் பிறந்தாலும், நத்தைதான்
 சாலக்கிராம மாமோ?

தடமேவு கடனீரிலே யுப்பு விளையினும்,
சாரசர்க்கரை யாகுமோ?
மங்காத செந்தமிழ்க் குறுமுனிக் குபதேசம்
வைத்த மெய்ஞ்ஞான குருவே!
மயிலேறி விளையாடு....... குமரேசனே!

சிங்காரம் வனமதில் - சிங்காரத்தோட்டத்தில். தீம் சொல்- இனிய குரல். புகல் - கூவுகிற. திரை எறியும் - அலைவீசும். கொட்டி - கொட்டிப்பூ; கொட்டி என்பது, ஓர் கிழங்குப் பூடு. செம் கஞ்சம் மலர் - செந்தாமரைப்பூ. அம் கான் அகத்தில் - அழகிய காட்டினிடத்தில். சங்கு ஆடு - சங்குகள் தவழ்கிற. சாலக்கிராமம் என்பது - தெய்வசான்னித்தியமுள்ள ஓர்வகைச் சிலை. தடமேவு - பெருமை பொருந்திய. சாரம் - சிறந்த இனிய கருப்பஞ்சாறு. மங்காத - அழியாத. குறுமுனி - குள்ளவடிவமுடைய இருடி; இது, அகத்தியரைக் குறிக்கும். (12)

[பலர்க்கும் பயன்படுவன]

கொண்டல்பொழி மாரியும், உதாரசற்குணமுடைய
கோவும், ஊருணியி னீரும்,
கூட்டமிடு மம்பலத் தாறுதருவி னிழலும்,
குடியாளர் விவசாயமும்,
கண்டவர்க ளெல்லாம் வரும் பெருஞ் சந்தியில்
கனி பல பழுத்த மரமும்,
கருணையுடனே வைத்திடுந் தணீர்ப்பந்தலும்,
காவேரிபோ லூற்றமும்,
விண்டலத் துறை சந்திராதித்த கிரணமும்,
வீசு மாருத சீதமும்,
விவேகியென் றுநல்லோ னிடத்திலுறு செல்வமும்
வெகுசனர்க் குபகாரமாம்,

வண்டிமிர் கடப்பமலர் மாலையணி செங்களப
மார்பனே! வடிவேலவா!
மயிலேறி விளையாடு ....குமரேசனே!

கொண்டல் - நீர்கொண்ட காளமேகம். மாரி - மழை. உதாரம் சற்குணம் உடைய கோ - ஔதார்யமென்னும் நற்குணமுடைய அரசன். ஔதார்யம் - ஈகைத்தன்மை. ஊருணி - குளம். அம்பலத்து உறு - பல ஜனங்களுங் கூடும் பொதுவெளியிடத்திற் பொருந்திய. தருவின் நீழல் - விருட்சத்தின் நிழல். சந்தி - பலவழிகள் கூடுமிடம். கனி - பழம். கருணை - அருள். ஊற்றம் - ஊற்று, பிரவாகம். விண் தலத்து - ஆகாயத்தினிடத்தில். உறை - வசிக்கின்ற. சந்திர ஆதித்தர் - சந்திரனும், சூரியனும். மாருதம் - காற்று. சீதம் - குளிர்ச்சி. விவேகி - பகுத்தறிவுடையவன் உறு - பொருந்திய. இமிர் - ஒலிக்கின்ற. செங்களபம் - சிவந்த கலவைச்சந்தனம். ''பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம், நயனுடையான்கண் படின்'' என்னுந்திருக்குறட்கருத்தை இங்குக் காண்க. (13)

[தாம் அழியினும் குணம் அழியாதவை]

தங்கமானது தழலினின்றுருகி மறுகினும்,
தன்னொளி மழுங்கிடாது;
சந்தனக் குறடுதான் மெலிந்து தேய்ந்தாலுமோ,
தன்மணங் குன்றிடாது;
பொங்கமிகு சங்கு செந்தழலில் வெந்தாலுமோ,
பொலி வெண்மை குறைவுறாது;
போதவே காய்ந்து நன்பால் குறுகினாலும்,
பொருந்து சுவை போய்விடாது;
துங்க மணி சாணையிற் றேய்ந்துவிட்டாலும்,
துலங்கு குண மொழியாது பின்;
தொன்மைதரு பெரியோர் மடிந்தாலும், அவர்
தூய நிறை தவறுகுமோ? [களது

மங்கள கல்யாணி குறமங்கை சுரகுஞ்சரியை
மருவு திண்புய வாசனே!
மயிலேறி விளையாடு.........குமரேசனே!

மறுகினும் - சுழன்றாலும், தத்தளித்தாலும். மழுங்கிடாது - குறையாது. சந்தனக்குறடு - சந்தனக்கட்டை. குன்றிடாது - குறையாது. பொங்கம் - பொலிவு. செம் தழலில் - சிவந்த அக்கினியில். பொலி - விளங்குகின்ற. போதவே - மிகவும். குறுகினாலும் - குறைந்தாலும், சுண்டினாலும். சுவை - உருசி. துங்கம் மணி - உயர்ந்தசாதி இரத்தினம். துலங்கு - பிரகாசிக்கின்ற. தொன்மை தரு - பழமையாகவருஞ் சிறப்புப் பொருந்திய தூய நிறை - பரிசுத்தமான நிறைகுணம். மங்கள கல்யாணி - சுபகரமான திருக்குணங்களும் திருவுருவமும் வாய்ந்தவள். குறமங்கை - வள்ளியம்மை; சுரகுஞ்சரி - தெய்வயானை; இவ்விருவரும் முருகக்கடவுளுடைய தேவிமாராவர். மருவு - கூடிய. திண்புயம் வாசனே - வலிய தோள்களிற் (கலவைச்சந்தனம் முதலியவற்றின்) பரிமளமுடையவனே. "அட்டாலும் பால் சுவையிற் குன்று(ம்); அளவல்ல, நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்; கெட்டாலும், மேன்மக்கள் மேன்மக்களே; சங்கு, சுட்டாலும் வெண்மை தரும்", "[illegible]னும் ஆவின் பால் தன்சுவை குன்றாது," "அரைக்கினும் சந்தனம் தன்மணம் மாறாது" முதலியன இங்கு அறிக. (14)

[யார்க்கும் அனுபவம் விடாமை]

தேசுபெறு மேருப்ர தக்ஷணஞ் செய்தும், மதி
தேகவடு நீங்கவில்லை;
திருமா லுறங்கிடுஞ் சேடனுக் குவணன்
செறும்பகை யொழிந்த தில்லை;
ஈசன் கழுத்திலுறு பாம்பினுக் கிரைவே
றிலாமலே வாயு வாகும்;
இனிய கன்றுகிவரு பரிதியானவனுக்
கிராகுவோ கனவிரோதி;

ஆசிலாப் பெரியோ ரிடத்தினி லடுக்கினும்,
அமைத்தபடி யன்றி வருமோ?
அவரவர்க ளனுபவ மனுபவித்திடல்வேண்டும்;
அல்லால் வெறுப்ப தெவரை?
வாசவனு டும்பரனை வரும் 'விசய சய'வென்று
வந்து தொழு மேத்த சரணு!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

தேசு - ஒளி. மேருவென்பது - தேவர்களுக்கு இருப்பிடமான பொன்மலையாம். மதி - சந்திரன். வடு - களங்கமாகிய அடையாளம். சேடன் - ஆதிசேஷனென்னும் ஸர்ப்பராஜன். உவணன் - கருடன்; ஸுபர்ணன் என்னும் வடமொழியின் விகாரம். செறும் பகை - கோபித்துக் கொல்லும் விரோதம். சர்ப்பம் காற்றை உட்கொள்ளுதல்பற்றி அதற்கு 'வாதாசனம்' என்னும் ஓர் பெயர் வடமொழியில் உள்ளமை காண்க. இனிய கண்ணுகி வரு பரிதி - உலகிற்குச் சிறந்த கண்ணுகவுள்ள சூரியன்; இதனுல், சூரியனுக்கு 'ஜகச் சக்ஷுஃ' என்ற ஓர் பெயர் உள்ளமை அறிக; இனி, இறைவனுக்கு வலக்கண்ணுகவுள்ள சூரியன் எனினுமாம். ஆசு இலா - குற்றமில்லாத. வாசவன் - தேவராஜனுன இந்திரன். உம்பர் அனைவரும் - தேவர்களெல்லோரும். விசயசய - விசேஷமாக வெற்றிபெறுக, வெற்றிபெறுக. ஏத்து சரணு - துதிக்கப் பெற்ற திருவடிகளையுடையவனே! (15)

[ஈதின்றி ஈது சிறவாது எனல்]

குருவிலா வித்தை, கூறிவிலா வாணிகம்,
குணமிலா மனைவி யாசை,
குடிநலமிலா நாடு, நீதியில்லா வரசு,
குஞ்சரமிலாத வெம்போர்,
திருவிலா மெய்த்திறமை, பொறையிலா மாதவம்,
தியானமில்லாத நிட்டை,
தீபமில்லாத மனை, சோதரமிலாத வுடல்,
சேகரமிலாத சென்னி,

உருவிலா மெய்வளமை, பசியிலா வுண்டி, புகல்
உண்மையில்லாத வசனம்,
யோசனையிலா மந்த்ரி, தயிரியமிலா வீரம்,
உதவியில்லாத நட்பு,
மருவிலா வண்ணமலர், பெரியோரிலாத சபை
வையத்திருந் தென்பயன்?
மயிலேறி விளையாடு........குமரேசனே!

கூர் அறிவு - நுட்பமான விஷயங்களையும் அறியத்தக்க சூக்ஷ்ம புத்தி; இனி, கூர் - மிக்க எனினுமாம். வாணிகம் - வர்த்தகம். குடி நலம் - குடிவளம். குஞ்சரம் - யானைச் சேனை. வெம் போர் - கொடிய யுத்தம். திரு - ஐச்வரியம், சம்பத்து. மெய் திறமை - சத்தியத்தின் கூறுபாடு; இனி, தேகபலம் என்பாருமுளர். பொறை - பொறுமை மாதவம் - சிறந்த பெருந்தவம். சோதரம் - உடன்பிறப்பு "மாறில் உடன்பிறப்பில்லா உடம்பு பாழ்" என்பது காண்க. சேகரம் - தலையணி; இது சிரோபூஷணமாகிய தலைப்பாகையைக் குறிப்பதென்பர். சென்னி - தலை. உரு - அழகு. புகல் - சொல்லுகிற. நட்பு - சிநேகம். மரு - நல்ல வாசனை. வண்ணம் - அழகு, நிறம். வையத்து - பூமியில். (16)

[பகைக்கப்படாதவர் இவர் எனல்]

அரசர்பகையும், தவம்புரி தபோதனர் பகையும்,
அரிய கருணீகர் பகையும்,
அடுத்துக் கெடுப்போர் கொடும்பகையும், உட்
அருளிலாக் கொலைஞர் பகையும், [பகையும்,
விரகுமிகு மூரிலுள்ளோருடன் பகையும், மிகு
விகட ப்ரசங்கி பகையும்,
வெகுசனப் பகையும், மந்திரவாதியின் பகையும்,
விழை மருத்துவர்கள் பகையும்,

உரமருவு கவிவாணர் பகையும், ஆசான் பகையும்,
உறவின்முறையார்கள் பகையும்,
உற்ற திரவியமுளாார் பகையும், மந்திரி பகையும்,
ஒருசிறிது மாகாது காண்.
வரநதியின் மதலையென வினிய சரவணமிசையில்
வரு தருண சிறு குழவியே!
மயிலேறி விளையாடு.........குமரேசனே!

'அரசர்பகை ஆகாது'—'அரசன் அன்று கொல்லும்' என்பது பழமொழி. தபோதனர் - செல்வத்தைப்போலத் தவத்தைப் பாதுகாப்பவராகிய முனிவர்கள். அரிய கருணீகர் - (தப்புதற்கு) அருமையான கொடுமையைச் செய்யகூடியவர்களாகிய கணக்கர்கள். உள் பகை - தனக்கு அந்தரங்கராயிருந்துகொண்டே பகைவர்க்கு இடங்கொடுக்கிற பங்காளிகள் முதலிய உள்ளாய் நிற்கும் பகைவர். விரகு - வல்லமை, தந்திரம், திறமை, அறிவு. "ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்" ஆதலால், ஊராரோடு பகை கொள்ளலாகாது. மிகு விகடம் ப்ரசங்கி - மிகவும் விநோதமாகப் பேசும் விகடக்காரன். விழை மருத்துவர்கள் - விரும்பத்தக்க வைத்தியர். மருத்துவர் என்பது, மருந்து என்பதன் அடியாக வந்தது. உரம் மருவு கவிவாணர் - வலிமை பொருந்திய கவிஞர். கவி வாணர் - கவிபாடி வாழ்பவர்; வாணர்-வாழ்நர் என்பதன் மரூஉ மொழி. இனி, கவிகளாகிய பாணங்களைத் தொடுப்பவ ரென்பாருமுளர். ஆசான் - ஆசாரியன். உற்ற-மிக்க. வர நதி - சிறந்த கங்கையாறு. மதலை - மகன். சரவணம் மிசையில் - சரவணப் பொய்கையினிடத்தில். வரு - அவதரித்த. தருண சிறு குழவியே - என்றும் மாறாத இளமைப்பருவத்தையுடைய சிறிய குழந்தையானவனே! (17)

[அவ்வவ் வினத்தில் உயர்ந்தவை]

தாருவிற் சந்தானம், நதியினிற் கங்கை, விரதத்தினிற் சோம வாரம்,

தகைபெறு நிலத்தினிற் காச்மீர கண்டம்,
தலத்திற் சிதம்பர தலம்,
சீருலவு ருஷிகளில் வசிட்டர், பசுவிற் காம-
தேனு, முனிவரில் நாரதன்,
செல்வ நவமணிகளிற் றிகழ் பதுமராகமணி,
தேமலரி லம்போருகம்,
பேருலவு கற்பினி லருந்ததி, கதித்திடு
பெலத்தின் மாருதம், யானையில்
பேசி லைராவதம், தமிழினி லகத்தியம்,
பிரணவம் மந்திரத்தில்,
வாரிதியிலே திருப்பாற்கடல், குவட்டினில்
மகாமேரு வாகு மன்றே!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

தாரு - தருவென்பதன் நீட்டல்; விருட்சம். சந்தானமென்பது - கற்பகவிருக்ஷம். சந்தனமென்பதும் பாடம். சோமவாரம் என்பது-சோமவாரவிரதத்தைக் குறிக்கும். சோமவாரம்-திங்கட்கிழமை. தகை பெறு நிலத்தினில் - பெருமைபெற்ற பூமியில். சீர் உலவு - சிறப்புப்பொருந்திய. காமதேனுவென்பது - வசிட்டமாமுனிவருடையது. நவ மணிகள் - ஒன்பதுவகை இரத்தினங்கள்; அவை - கோமேதகம், நீலம், பவழம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன. திகழ் - விளங்குகின்ற. தேன் மலரில் - தேன்பொருந்திய புஷ்பங்களில். அம்போருகம் - தாமரைமலர். பேர் உலவு கற்பினில்- பிரசித்திபொருந்திய பதிவிரதாதருமமுடைய மகளிரில். அருந்ததியென்பவள் வசிட்டரது மனைவி. கதித்திடு - சிறந்த, மிக்க. மாருதம் - காற்று, வாயுதேவன். ஐராவதமென்பது - கீழ்த்திசையானை; இந்திரனுக்கு உரியது. தமிழினில் - தமிழிலக்கண நூல்களில். அகத்தியம் என்பது - அகத்தியமுனிவர் இயற்றிய தமிழிலக்கண நூல். வாரிதி - கடல். குவட்டினில் - மலைகளில்.

[அவரவர்க்குப் பலமாவன]

அந்தணர்க் குயர்வேதமே பலம்; கொற்றவர்க்
கரிய சௌரியமே பலம்;
ஆனவணிகர்க்கு நிதியே பலம்; சூத்திரர்க்கு
ஆயி னேருழவே பலம்;
மந்திரிக்குச் சதுருபாயமே பலம்; நீதி-
மானுக்கு நடுவே பலம்;
மாதவர்க்குத் தவசு பலம்; மடவியர்க்கு நிறை
மானமிகு கற்பே பலம்;
தந்திர மிகுத்த கனசேவகர் தமக்கெலாம்
சாமிகாரியமே பலம்;
சான்றவர்க்குப் பொறுமையே பலம்; புலவோர்-
தமக்கு நிறை கல்வி பலமாம்;
வந்தனைசெயும் பூசை செய்பவர்க் கன்பு பலம்.
வால வடிவான வேலா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

அந்தணர் - பிராமணர். கொற்றவர் - அரசர்; ஜயமுடையவ ரென்பது காரணப்பொருள். நிதி - ஐசுவரியம். ஆயின் - ஆரா யின்; இதற்கு ஆனல் என்றும் பொருள்கொள்ளலாம். சதுர் உபாயம் - நால்வகை உபாயங்கள்; அவை - சாம, தான, பேத, தண்டம் என்பன. நடு - நடுநிலைமை; பக்ஷபாதமின்மை. மாதவர்- சிறந்த இருடிகள். மடவியர் - மகளிர்; இது, மடமை என்பதன் அடியாக வந்தது. கற்பு - பதிவிரதாதருமம். சான்றவர் - பெரி யோர்; சால் - பகுதி. புலவோர் - வித்துவான்கள்; புலமை - பகுதி. வந்தனை - வணக்கம். அன்பு - பக்தி. வால வடிவு ஆன - சிறு குழந்தை யுருவமுடைய. (19)

[உபகார மில்லாதவை]

கடனீர் மிகுந்தென்ன? ஒதிதான் பருத்தென்ன?
காட்டிலவு மலரிலென்ன?

கருவேல் பழுத்தென்ன? நாய்ப்பால் சுரந்தென்ன?
கானின் மழை பெய்து மென்ன?
அடர்கழுதை லத்தி நிலமெல்லாங் குவிந்தென்ன?
அரிய குண மில்லாத பெண்
அழகா யிருந்தென்ன? ஆஸ்தானகோழை பல
அரிய நூலோதி லென்ன?
திடமினிய பூதம் வைகுபொன் காத்திருந்தென்ன?
திறன்மிகுங் காடி மயிர்தான்
செறிவாகி நீண்டென்ன? வஸ்த்ரபூஷணமெலாம்
சித்திரத் துற்று மென்ன?
மடமிகுந் தெவருக்கு முபகார மில்லாத
வம்பர் வாழ்வுக்கு நிகராம்.
மயிலேறி விளையாடு.........குமரேசனே!

ஒதி - ஒதியமரம். காட்டிலவு-முள்முருக்கு என்பர். கானில்-காட்டில். ஆஸ்தான கோழை - சபையிற் பேச அஞ்சி நடுங்குபவன். திடம் இனிய - வலிமையிற் சிறந்த. திறல் - வலிமை. செறிவு - அடர்த்தி. உற்றும் - பொருந்தியும். மடம் - அறியாமை. வம்பர் - வீணர். நிகர் - ஒப்பு.

(20)

[செத்தும் சாகாதவை]

அனைவர்க்கு முபகாரமாம் வாவி கூவ முண்-
டாக்கினோர், நீதிமன்னர்,
அழியாத தேவாலயங் கட்டிவைத்துளோர்,
அகரங்கள் செய்த பெரியோர்,
தனையொப்பிலாப் புதல்வனைப் பெற்றபேர்,பொருது
சமர்வென்ற சுத்த வீரர்,
தரணிதனி னிலைநிற்க வெந்நாளு மாறாத
தருமங்கள் செய்தபேர்கள்,

கனவித்தை கொண்டவர்கள், ஓயாத கொடையாளர்,
காவியஞ் செய்த கவிஞர்,
கற்பினின் மிகுந்த வொருபத்தினி மடந்தையைக்
கடிமணஞ் செய்தோர்களிம்-
மனிதர்கள், சரீரங்கள் போகினுஞ் சாகாத
மனிதரிவ ராகு மன்றோ?
மயிலேறி விளையாடு.........குமரேசனே!

அனைவர்க்கும் - எல்லோர்க்கும். வாவி - குளம். கூவம்-கூபம்; கிணறு. அகரங்கள் - அக்ரஹாரங்கள்; பிராமணர் குடியிருக்கத்தக்க வீதிகளும், ஊர்களும். பொருது - யுத்தஞ் செய்து. சமர் - யுத்தம். சுத்த வீரர் - போரிற் புறங்காட்டாத வீரர். தரணி - பூமி. கனவித்தை - மேன்மைபொருந்திய மிக்க கல்வி. பத்தினி - பதி என்பதன் பெண்பால். மடந்தை - மாது. கடி மணம் - விவாஹம்; கடியென்பது, சிறப்பு முதலிய பல பொருள்களைக் குறிக்கும். (21)

[சிறிதும் பயன் படாதவர்]

பதராகினும் கனவிபூதி விளைவிக்கும்;
பழமைபெறு சுவராகினும்
பலருக்கு மறைவாகும்; மாடுரிஞ்சிடும்; மலம்
பன்றிகட் குபயோகமாம்;
கதமிகு கடாவென்னி லுழுது புவிகாக்கும்; வன்
கழுதையும் பொதிசுமக்கும்;
கல்லென்னிற் றேவர்களு மாலயமுமாம்; பெருங்
கான்புற்று மரவ மனையாம்;
இதமிலாச் சவமாகினும் சிலர்க் குதவிசெயும்;
இழிவுறு குரங்காயினும்
இரக்கப் பிடித்தவர்க் குதவிசெயும்; வாருகோல்
ஏற்ற மாளிகை விளக்கும்;

மதமது மிகும் பரமலோபரா லுபகாரம்
மற்றொருவருக்கு முண்டோ?
மயிலேறி விளையாடு ....குமரேசனே!

மாடு உரிஞ்சிடும் - மாடுகள் முதலியன தினவைத் தீர்த்துக் கொள்ளும்; குட்டிச்சுவர்களும் மாடுரிஞ்சிட உதவுமென்க. பன்றிகட்கு உபயோகமாம் - பன்றிகளுக்கு உணவாய்ப் பயன்படும். கதம் - கோபம். புவி - பூமி. வன் கழுதை - வலிய கழுதை. கான் - காடு. அரவம் மனையாம் - பாம்புக்கு வீடாம். இதம் - நன்மை, இன்பம். சவம்-பிணம். இரக்க - பிச்சையெடுக்க. வாருகோல் - விளக்குமாறு, துடைப்பம். ஏற்றம் - உயர்வு. பரமலோபர் - மிகுந்த லோபகுணமுடையவர்; லோபமென்பது- ஈயாத்தன்மை. (22)

[திருவாழ் இடங்கள்]

கடவாரணத்திலும், கங்கா சலத்திலும்,
கமலாசனந்தன்னிலும்,
காகுந்தன் மார்பிலும், கொற்றவரிடத்திலும்,
காலியின் கூட்டத்திலும்,
நடமாடு பரியிலும், பொய்வார்த்தை சொல்லாத
நல்லோரிடந்தன்னிலும்,
நல்ல சுபலக்ஷண மிகுந்த மனைதன்னிலும்,
ரண சுத்தவீரர்பாலும்,
அடர்கேதனத்திலும், சுயம்வரந்தன்னிலும்,
அருந்துளசி வில்வத்திலும்,
அலர்தரு கடப்பமலர்தனிலும், இரதத்திலும்,
அதிக குணமான ரூப
மடவாரிடத்திலும் குடிகொண்டு திருமாது
மாறு திருப்ப ளன்றோ!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

கட வாரணம் - மதயானை. கமலாசனம் - தாமரைமலராகிய பீடம். காகுத்தன் - திருமாலின் திருவவதாரமான இராமன்; இது, இங்குத் திருமாலைக் குறிக்கும். காலியின் கூட்டம் - பசு மந்தை. நடம் ஆடு - நர்த்தனஞ்செய்கின்ற. 'பயிரிலும்' என்றும் பாடம்; அப்போது, 'நடமாடு' என்பது - செழிப்பான என்னுங் கருத்தைக் குறிக்கும். ரணம் - போர். வீரர்பாலும் - வீரரிடத்திலும். அடர் - நெருங்கிய. கேதனம் - துவசம்; வெற்றிக்கொடி. சுயம்வரம் - பெண் கணவனைத் தானே வரித்துக்கொள்ளும் கலியாணம்; இது, இங்குப் பொதுவாக விவாஹத்தைக் குறிக்கும். அலர்தரு - மலர்ந்த. மடவார் - மகளிர்; இது, இங்குச் சுமங்கலிகளைக் குறிக்கும். திரு மாது - இலக்குமி. (23)

[குறிப் பறிதல்]

மனதிற் கடும்பகை முகத்தினா லறியலாம்;
மாநிலப் பூடுகளெலாம்
மழையினா லறியலாம்; நல்லார்பொலார்தமை
மக்களா லறியலாகும்;
கனமருவு சூரரைச் சமரினா லறியலாம்;
கற்றவொரு வித்துவானைக்
கல்வி ப்ரசங்கத்தினா லறியலாம்; குணங்-
களை நடையினா லறியலாம்;
தனதக மடுத்தது பளிங்கினா லறியலாம்;
சாதி சொல்லா லறியலாம்;
தருநீதி கேள்வியா லறியலாம்; பிணிகளைத்
தாதுக்களா லறியலாம்;
வனச விகசித வதன! பரிபூரணானந்த!
வால்வடிவான வேலா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

கடும் பகை - கொடிய விரோதம். 'மன்றிற் கடும்பகை முகத் தினு லறியலாம்'—"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம், கடுத்தது காட்டும் முகம்," "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்பன காண்க. பூதனம் மாநிலமெலாம் என மாற்றுக; பூண்டு கள் முளைக்கின்ற பெரிய நிலத்தின் தன்மை முழுவதையும் என்க. 'மாநிலப் பூதகனெலாம் மழையினு லறியலாம்'—"நிலத்தியல்பு வானமுரைத்துவிடும்" என்பது காண்க. 'நல்லார் பொருளர் தமை மக்களாலறியலாகும்'—"மகனுரைக்கும் தந்தைநலத்தை", "செந்நெலாலாய செழுமுளை மற்றும் அச்செந்நெலே யாகிவிளைத லால்,......மகனறிவு தந்தையறிவு," "பழியின்மை மக்களாற் காண்க," "தந்தையரொப்பர் மக்கள்" என்பன காண்க. கனம் மருவு - பெருமை பொருந்திய. சமர் - யுத்தம். பளிங்கு - கண் ணுடி. தனது அகம் அடுத்தது - அதனிடத்து [கண்ணுடியினிடத்து] ச்சார்ந்த பொருளின் தன்மையை. தரு நீதி கேள்வியால் அறியலாம் - (சாஸ்திரங்களினுல்) உபதேசிக்கப்பட்ட நீதிகளைப் (பெரியோரிடம் தாம்) கேட்டலினுல் அறிந்துகொள்ளலாம். பிணிகள் - வியாதிகள். தாதுக்கள் - நாடிகள். வனச விகசித வதன - தாமரைமலர்போல மலர்ச்சிபொருந்திய திருமுகமுடை யவனே! பரிபூரண ஆனந்த - நிறைந்த ஆனந்தவடிவமானவனே! இது, தனது அடியார்க்கு ஆனந்தத்தைத் தருபவன் என்றபொரு ளையுங் கொடுக்கும். வால வடிவு ஆன - இளம் பிள்ளைவடிவான. வேலா - வேற்படையையுடையவனே! (24)

[குணம் மாருமை]

குணமிலாத் துஷ்டமிருகங்களையும் நயகுணம்
கொண்டிடப்படுத்திவிடலாம்;
கொடிய பலவிஷநோய்கள் யாவு மௌஷதமது
கொடுத்துத் திருப்பிவிடலாம்;
உணர்விலாப் பிரமராக்ஷஸிமுதற் பேய்களை
உகந்து கூத்தாட்டிவிடலாம்;

உபாயத்தினுற் பெரும்பறவைக்கு நற்புத்தி
உண்டாக்கலாம்; உயிர் பெறப்
பிணமதையெழுப்பலாம்; அக்கினி சுடாமல்
பெரும்புனலெனச் செய்யலாம்;
பிணியையு மகற்றலாம்; காலதூதுவரையும்
பின்பு வருகென்று சொலலாம்;
மணலையுங் கயிருத் திரிக்கலாம்; கயவர்குண
மட்டுந் திருப்ப வசமோ?
மயிலேறி விளையாடு........குமரேசனே!

நய குணம் - இனிய குணம், நற்குணம். உட்படுத்தி - வசப்படுத்தி. உகந்து - விரும்பி, மகிழ்ந்து. புனல் - ஜலம். பிணி - வியாதி. அகற்றலாம் - நீக்கலாம். கால தூதுவர் - யமதூதர். வருக + என்று = வருகென்று; ஈற்று அகரம் தொக்கது. கயவர் - கீழ்மக்கள். (25)

[இத்தீக்குணத்தோர் இவ்விலங்குபோல்வர் எனல்]

தான்பிடித்தது பிடிப்பென்று மேலவர்புத்தி
தள்ளிச் செய்வோர் குரங்கு.
சபையிற் குறிப்பறியமாட்டாம னின்றவர்-
தாம் பயனிலாத மரமாம்.
வீம்பினு லெளியவரை யெதிர்பண்ணி நிற்குமொரு
வெறியர் குரைஞமலி யாவார்.
மிகுநாடி வருவோர் முகம்பார்த்திடா லோபர்
மேன்மை யில்லாத கழுதை.
சோம்பலொடு பெரியோர்சபைக்குட் படுத்திடுந்
தூங்கலே சண்டிக் கடா.
சூதுடனடுத்தோர்க் கிடுக்கணே செய்திடும்
துட்டனே கொட்டு தேளாம்.

மாம்பழந்தனை வேண்டி யந்நாளி லீசனை
வலமாக வந்த முருகா!
மயிலேறி விளையாடு..........குமரேசனே!

தான் பிடித்தது பிடிப்பு - தான் பிடித்ததே பிடி. மேலவர்-பெரியோர். 'சபையிற் குறிப்பறியமாட்டாமல் நின்றவர் தாம் பயனிலாத மரமாம்'—"கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும், அவையல்ல நல்லமரங்கள்;—சபைநடுவே,.........குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம்" என்னுஞ் செய்யுளையுங் காண்க. வீம்பு - இறுமாப்பு. குரை ஞமலி - குரைக்கும் நாய். நாடி - தேடி, விரும்பி. ஆங்கல் - ஆங்குமூஞ்சி. சண்டிக்கடா - முரட்டுக்கடா. சூதுடன் இடுக்கணை செய்திடும் என இயையும். இடுக்கண் - துன்பம். வலமாக-பிரதக்ஷணமாக. 'மாம்பழந்தனை வேண்டி யந்நாளி லீசனை வலமாக வந்த முருகா'—கதை கேட்டறிக; விரிப்பின் பெருகும். (26)

[அற்பர் வாழ்வால் குணம் வேறுபடேதல்]

அற்பர்க்கு வாழ்வு சற்றதிகமானால், விழிக்கு
யாவருருவுந் தோன்றிடாது;
அண்டிநின்றே நல்லவார்த்தைகளுரைத்தாலும்,
அவர்செவிக் கேறிடாது;
முற்பக்ஷமானபேர் வந்தாலும், 'வாரு' மென
மொழியவும் வாய் வராது;
மோதியே வாதப் பிடிப்பு வந்ததுபோல
முன்காலை யகல வைப்பார்;
விற்பன மிகுத்த பெரியோர் செய்திசொன்னாலும்
வெடுவெடுத் தேசிநிற்பார்;
விருதா மகத்துவப் பேயது சவுக்கடி
விழும்போது தீருமென்பார்;

மற்புயந்தனி னீபமாலையணி லோலனே!
வள்ளலே! வடிவேலவா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

முன் பக்ஷமான என்று பிரித்துக்கொள்க. வாதம் பிடிப்பு - வாதரோகயினாலாகிய கால்பிடிப்பு. விற்பனம் - கல்வியறிவு. வெடு வெடுத்து - கடுகடுத்து. ஏசி - இகழ்ந்து, ஆக்ஷித்து, வைது. விருதா மகத்துவம் பேய் அது - வீண்பெருமை பாராட்டலாகிய பேயானது. மல் புயந்தனில் - மற்போர்புரியத்தக்க வலிமையுள்ள தோள்களில். நீபம் மாலை அணி லோலனே - கடப்பமலர் மாலையை யணிவதில் விருப்பமுள்ளவனே! வள்ளலே - (அடியார்க்கு) வரையாதருளுபவனே! (27)

[நல்லினஞ்சேர் பயன்]

சந்தன விருட்சத்தை யண்டிநிற்கின்ற பல
தருவு மவ்வாசனை தரும்;
தங்க மகமேருவை யடுத்திடுங் காக்கையும்
சாயல் பொன்மயமே தரும்;
பந்தமிகு பாலுடன் விராவிய தண்ணீரெலாம்
பால்போ னிறங் கொடுக்கும்;
படிக மணிகட்குளே நிற்கின்ற வடமு மப்
படியே குணங் கொடுக்கும்;
அந்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடில்,
அடுத்ததும் பசுமையாகும்;
ஆன பெரியோர்களொடு சகவாசமது செயின்,
அவர்கள்குண மருமென்பர் காண்.
மந்தர நெடுங்கிரியின் முன் கடல் கடைந்த வரி
மருக! மெய்ஞ்ஞான முருகா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

தருவும் - மரங்களும் சாயல் பொன்மயமே - பொன்மயமான ஒளியையே. பந்தம் மிகு - கலக்குந்தன்மை மிக்க. அந்தம் - அழகு. மரகதக்கல் பச்சையிரத்தினம். ஆனபெரியோர்கள் - தகுதியான பெரியோர்கள். நெடு மந்தரம் கிரியின் - உயர்ந்த மந்தரமென்னும் மலையைக்கொண்டு. அரி மருக - திருமாலினது மருமகனே! (28)

[பெரியோர்வாக்கிய பரிபாலனஞ் செய்தோர்]

தந்தைதாய் வாக்ய பரிபாலனஞ் செய்தவன்
தசரத குமார ராமன்.
தமையனருள் வாக்ய பரிபாலனஞ் செய்தோர்கள்
தருமனுக் கிளைய நால்வர்.
சிந்தையி லுணர்ந்து குருவாக்ய பரிபாலனம்
செய்தவ னரிச்சந்திரன்.
'தேகி'யென் றோர்க் கிலையெனு வாக்ய பாலனம்
செய்தவன் றான கன்னன்.
நிந்தைதவிர் வாக்ய பரிபாலனஞ் செய்தவன்
நீள் பல மிகுத்த அநுமான்.
நிறையுடன் பர்த்தாவின் வாக்ய பரிபாலனம்
நிலத்தினி னளாயினி செய்தாள்.
மந்தை, வழி, கோயில், குளமுங் குலவு தம்பிமுகன்
மகிழ்தர வுகந்த துணைவா!
மயிலேறி விளையாடு.........குமரேசனே!

தேகி - கொடு. இலை எனு வாக்ய பரிபாலனம் செய்தவன் - 'இல்லை' என்று சொல்லாமையாகிய மொழியை (த்தன்னிடத்தில் நீங்காதபடி) பாதுகாத்தவன். நிந்தை தவிர் வாக்ய பரிபாலனம் செய்தவன் - பழிப்பில்லாத (பெரியோர் சொல்லை) நன்கு பாதுகாத்தவன். நளாயினி - நாளாயனி; திரௌபதியின் முற்பிறப்புப்பெயராம். நிறை - மனத்தைக் கற்புநெறியில் நிறுத்துதல்; கற்புநிலைமை. குலவு - விளங்குகின்ற; எழுந்தருளியிருக்

இற. தும்பி முகன் - யானைமுகக்கடவுளாகிய விநாயகன். மகிழ்தர - மகிழ்ச்சியடைய. உகந்த - (அவனுடன்) விரும்பி விளையாடுகின்ற. துணைவா - அவனது தம்பியே! (29)

[முயற்சியின் மிக்கது ஊழ் எனல்]

வங்காள மேறுகினும், வாருகோ லொருகாசு
மட்டன்றி யதிகமாமோ?
வானேறி யுயரப் பறந்தாலும், ஊர்க்குருவி
வண்ணப் பருந்தாகுமோ?
கங்கா சலந்தனின் மூழ்கினும், பேய்ச்சுரைக்
காய் நல்ல சுரை யாகுமோ?
கடலுக்கு ணாழியை யமுக்கியே மொண்டிடில்,
காணுமோ நாழிதான்?
ஐங்காத மோடினும், தன்வினைக டன்னொடே
அடையாம னீங்கிவிடுமோ?
ஆரிடஞ்சென்றாலும், வெகுதொலைகள் சுற்றினும்
அமைத்தபடி யன்றி வருமோ?
மங்காத செந்தமிழ் கொண்டு நக்கீரர்க்கு
வந்த துயர் தீர்த்த முருகா!
மயிலேறி விளையாடு....... குமரேசனே!

வங்காளம் ஏறுகினும் - வங்காளநாட்டிற்குச் சென்றாலும். வாருகோல் - விளக்குமாறு, துடைப்பம். வண்ணம் - அழகு, நிறம், வடிவு. வெகு தொலைகள் - வெகுதூரங்கள். அமைத்தபடி அன்றி வருமோ - (அவரவர்க்குக் கடவுளால்) அமைக்கப்பட்ட முறைப்படியன்றிவேறுவிதமாகஉண்டாகுமோ? [உண்டாகாது.] மங்காத - அழியாத (சிறப்புடைய). செந்தமிழ் - செந்தமிழ்ப் பாடல்: திருமுருகாற்றுப்படை முதலியன. கொண்டு - ஏற்றுக் கொண்டு. நக்கீரர்க்கு வந்த துயர் - மரணத்துன்பம்; கதைவிவரம் கேட்டறிக. நக்கீரர் என்பவர் சங்கப்புலவர்களில் ஒருவர்.

[இடும்பால் அழிவு]

சூரபத்மன் பலமும், ராவணன் தீரமும்,
துடுக்கான கஞ்சன் வலியும்,
துடியான இரணியன் வரப்ரசாதங்களும்,
தொலையாத வாலி திடமும்,
பாரமிகு துரியோதனாதி நூற்றுவரது
பராக்ரமமும், மது கைடவர்
பாரிப்பும், மாவலித னாண்மையும், சோமுகன்
பாங்கிலுறு வல்லமைகளும்,
ஏரணவு கீசகன் கனதையும், திரிபுரர்
எண்ணமும், தக்க னெழிலும்,
இவர்களது சம்பத்து நின்றவோ? அவரவர்
இடும்பா லழிந்த வன்றோ!
மாரனைக் கண்ணா லெரித்தருள் சிவன்தந்த
வரபுத்ர! வடிவேலவா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

இடும்பால் அழிவு - தீச்செயலால் அழிதல். தீரம் - தைரியம். துடுக்கு ஆன - தீக்குணமுள்ள. துடி ஆன - மேன்மைகொண்ட, பதைபதைப்புடைய. ப்ரசாதங்கள் - அநுக்கிரகங்கள். திடமும் - வலிமையும். பாரம் மிகு - (பூமிக்குப்) பாரமாக மிகுந்த. துரியோதன ஆதி நூற்றுவர் - துரியோதனன் முதலிய நூறுபேர்கள். மது கைடவர் - மது, கைடபன் என்னும் இரண்டு அசுரர். பாரிப்பு - பெருமை. மாபலி - மகாபலிசக்ரவர்த்தி. ஆண்மை - பௌருஷம். சோமுகன் பாங்கில் உறு - சோமுகாசுரனிடத்திற் பொருந்திய. ஏர் அணவு - அழகும் வளர்ச்சியும் பொருந்திய. கனதை - பெருந்தன்மை. திரிபுரர் - திரிபுரத்து அசுரர். எழிலும் - செருக்கும். இடும்பால் - தீச்செயல்களால். மாரன் - மன்மதன். வரபுத்ர - சிறந்த குமாரனே!

குமரேச சதகம்

S. K. S. S. P. V. S. 3
& BROTHERS.
Surakudi.

[நட்புநிலை]

மாமதியின் முயலான ததுதேய்வுழித் தேயும்
வளருமப்போது வளரும்;
வாவிதனி லாம்பல்கொட்டிக ளதனி னீர்வற்றின்
வற்றிடும்; பெருகி லுயரும்;
பூமருவு புதல்பூடு கோடையிற் றீய்ந்திடும்;
பொங்குகாலந் தழைக்கும்;
புண்டரிக மிரவிபோ மளவிற் குவிந்திடும்;
போதுதயமாகின் மலரும்;
தேமுட லிளைக்கி லுயிர் கூடவு மிளைக்கும்; அது
தேறி லுயிருஞ் சிறக்கும்;
சேர்ந்தோர்க் கிடுக்கணது வந்தாலும், நல்லோர்
சிநேக மப்படியாகுமே.
வாமன சொரூப மதயானைமுகனுக் கிளைய
வால!குருபர!வேலவா!
மயிலேறி விளையாடு.........குமரேசனே!

நட்புநிலை-சிநேகதருமம். மா மதி - பெரிய சிறந்த சந்திரன். முயலானது - முயல்வடிவம்போலத் தெரிகின்ற களங்கம். தேய்வுழி - குறையும்போது; தேய்+உழி என்று பிரியும்; இடையில் வகரமெய் தோன்றிற்று; இதனை 'மெய்யீற்று உடம்படுமெய்' என்பர். வாவிதனில் - குளத்தில். பெருகில் - (அக்குளத்தில் நீர்) மிகுந்தால். பூ மருவு புதல் பூடு - நிலத்திற்பொருந்திய புற்களும், பூண்டுகளும். பொங்கு காலம் - (அந்நிலம் மழை வளத்தாற்) செழிக்கும்போது. புண்டரிகம் - தாமரை. இரவிபோம் அளவில்- சூரியன் அஸ்தமிக்கும்பொழுது. தேம் உடல் இளைக்கில் - (உயிர்க்கு) இடமான உடல் இளைத்தால். சிறக்கும் - சிறந்தவலிமை பெறும். இடுக்கணது : துன்பம். 'நல்லோர் சிநேகம் அப்படி ஆகுமே'- நல்லோர் தம்மால் அடுக்கப்பட்டவர்கள் இன்பமடையத் தாமும் இன்பமடைந்து, அவர்கள் துன்பமடையத் தாமும்

துன்பமடைவர் என்பதாம்; "அக்குளத்திற், கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்போலவே, ஒட்டி யுறவா ருறவு" என்றார் ஔவையாரும் வாமன சொரூபம் - குள்ளமான வடிவத்தை யுடைய. வால - இளமைப்பருவ முடையவனே! குரு பர - சிறந்த குருவே! (32)

[கைப்பலனமைவை]

பருவத்திலே பெற்ற சேயும், புரட்டாசி
பாதி சம்பா நடுகையும்,
பலமினிய வாடிதனி லானைவால்போலவே
பயிர்கொண்டு வரு கரும்பும்,
கருணையொடு மிக்கநாணயமுளோர் கையினில்
கடனிட்டு வைத்த முதலும்,
காலமது நேரிற் றனக்குறுதியாக முன்
கற்றுணர்ந்திடு கல்வியும்,
விருதரசரைக் கண்டு பழகிய சிநேகமும்,
விவேகிகட் குபகாரமாம்;
வீணல்ல விவையெலாம்; கைப்பலனதாக வபி-
விருத்தியாய் வருமென்பர் காண்.
மருவுலாவிய நீபமாலையுந் தண்டரள
மாலையும் புனை மார்பனே!
மயிலேறி விளையாடு.........குமரேசனே!

பருவத்திலே - தக்க பிராயத்தில். சேய் - புத்திரன். பலம் இனிய - பலந்தருதலிற் சிறந்த. கருணை - தயை; முதல் - முதற்பொருள். காலமது நேரில் - காலம் வாய்த்தால்; காலம் வாய்த்போது என்க. உறுதி ஆக - நன்மையைத் தருவதாக. விருது - குடை, கொடி, பட்டப்பெயர்கள் முதலியன. மரு உலாவிய நீபம் மாலை - மணம்பொருந்திய கடப்ப மலர்மாலை. தண் தாளம்- குளிர்ந்த முத்து. புனை - அணிந்துள்ள. (33)

[திரும்பமாட்டாதவை]

ஆடரவின் வாயினி லகப்பட்ட தவளையும்,
ஆலைவாயிற் கரும்பும்,
அரிதான கப்பலிற் பாய்மரக் காற்றினில்
அகப்பட்டு மெலி காக்கையும்,
நாடறியவே தாரைவார்த்துக் கொடுத்ததும்,
நமன் கைக்குளான வுயிரும்,
நலமாகவே யணை கடந்திட்ட வெள்ளமும்,
நாய்வேட்டை பட்ட முயலும்,
தேடியுண்பார் கைக்குளான பலவுடைமையும்,
தீவாதையான மனையும்,
திரள் கொடுங்கோலரசர் கைக்கேறு பொருளும்
திரும்பி வாரா வென்பர் காண்.
மாடமிசை யன்னக் கொடித்திரள்கொள் சோணாடு
வாழ வந்திடு முதல்வனே!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

ஆடு அரவின் வாயினில் - படமெடுத்து ஆடுகின்ற ஸர்ப்பத்தின் வாயில். 'ஆலைவாயிற் கரும்பும்' என்பதும் ஓர்பாடம்; ஆலை-கரும்பு ஆலை. அரிது ஆன - (கரைக்கு வெகுதூரமாக உள்ளதனால் கிட்டுவதற்கு) அருமையான. மெலி - வருந்துகின்ற. நமன் - யமன். நலம் ஆக - நன்றாக. தேடி உண்பார் - கள்வர் முதலியோர். தீவாதை ஆன மனை - நெருப்பின் கொடுமைக்கு இரையான வீடு. திரள் - மிகுதி.--மாடம் மிசை - உபரிகையின்மீது. அன்னம் கொடி திரள் கொள் சோணாடு - யாசகர்க்கு அன்னமிடுமிடமென்று அடையாளமாகக் கட்டிய கொடிகளின் கூட்டத்தைக் கொண்ட. சோழநாடு: "மேதக்க சோழவளநாடு சோறுடைத்து" என்றார் ஔவையாரும். சோணாடு வாழ - சோழநாட்டிலுள்ளார் உஜ்ஜீவிக்க. சோழநாடு என்பது சோணாடு என மரூஉவாயிற்று. (34)

[இதனினும் இது நன்று என்றல்]

கடுகடுத் தாயிரஞ் செய்குவதின், இன்சொலால்
களிகொண் டழைத்த னன்று;
கனவேள்வி யாயிரஞ் செய்வதின், பொய்யுரை
கருத்தொடு சொலாமை நன்று;
வெடுவெடுக்கின்ற தோரவிவேகி யுறவினின்,
விவேகியொடு பகைமை நன்று;
வெகுமதிக ளாயிரஞ் செய்வதின், அரைக்காசு
வேளைகண் டுதவ னன்று;
சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடைக்கு, இங்குச்
சற்றுமில் லென்ன னன்று;
சம்பத்துடன் பிணியின் மெலிகுவதின், நோயற்ற
தாரித்திரிய நன்றுகாண்.
மடுவினிற் கரி யோலமென்ன வந்தருள்செய்த
மான் மருகனான முருகா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

கடுகடுத்து - வெறுப்புக்கொண்டு. ஆயிரம் - மிகப்பலவான உதவிகள். களி - சந்தோஷம், முகமலர்ச்சி. கனம் வேள்வி - பெரிய சிறந்த யாகம். கருத்தொடு - மனம் அறிய, மனப்பூர்த்தியாக. வெடுவெடுக்கின்றது - கடுமையாயிருக்கின்ற, கோபித்துப் பேசுகின்ற. வேளை கண்டு உதவல் - சமயமறிந்து கொடுத்தல். சடுதியில் = சடிதியில். பக்குவம் சொல்லும் கொடைக்கு - (இரப்பவர்க்குக் கொடாமலிருந்துகொண்டே) அவரிடத்துப் பக்குவமாக (த்தேனொழுக) ப்பேசுகின்ற தானத்தைப்பற்றிய பசப்பு வார்த்தையைக்காட்டிலும்; இது, இங்கு, தந்திரமாகச் சமாதானஞ் சொல்லுதலைக் குறிக்கும். கரி - கஜேந்திரனென்னும் யானை. ஓலம் என்ன - முறையிட; 'ஆதிமூலமே! உனக்கு நான் அபயம்' என்று கூவியழைக்க. மால் - மகாவிஷ்ணு. மருகன் - மருமகன். (35)

[பலகூடினும் ஒன்றற்கு ஈடாகாதவை]

தாரகைக ளொருகோடி வானத்திருக்கினும்,
சந்திரற் கீடாகுமோ?
தாருவிற் கொடிதொனிகள் பலகூடினாலும், ஒரு
தம்பட்ட வோசை யாமோ?
கோரமிகு பன்றியின் குட்டிபல கூடின், ஒரு
குஞ்சரக் கன் றாகுமோ?
கொட்டிமலர் வாவியிற் பலகூடினாலும், ஒரு
கோகனதமல ராகுமோ?
பாரமிகு மாமலைகள் பல கூடினாலும், ஒரு
பைம்பொன் மகமேரு வாமோ?
பலனிலாப் பிள்ளைக ளனேகம் பிறந்தும், விற்-
பனனொருவனுக்கு நிகரோ?
வாரணக்கொடி யொருகரத்திற்பிடித் தொன்றில்
வடிவே லணிந்த முருகா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

தாரகைகள் - நக்ஷத்திரங்கள். ஈடு - ஒப்பு. தாரு - மரம்; தரு என்பது நீண்டது. கொடி - காக்கை; கொடிகளுமாம். கோரம் - கொடிய தன்மை, கொடிய விகாரவடிவம். குஞ்சரம் - யானை. கோகனதம் - தாமரை. பைம்பொன் - பசுமை பொன் என்று பிரியும். விற்பனன் - கல்வியறிவுடையவன். வாரணம் - கோழி. கரம் - கை. ஒன்றில் - மற்றொரு கையில். (36)

[தீச்சார்பால் பயன்படாதவை]

மடுவினிற் கஞ்சமலருண்டு; ஒருவ ரணுகாமல்
வன்முதலை யங்கிருக்கும்;
மலையினிற் றேனுண்டு; சென்றொருவர் கிட்டாமல்
மருவி யதில் வண்டிருக்கும்;

நெடுமைதிகழ் தாழைமலருண்டு; ஒருவரனுகாமல்
நீங்காத முள்ளிருக்கும்;
நீடு பல சந்தன விருட்சமுண்டு; அணுகாது
நீளரவு சூழ்ந்திருக்கும்;
குடிமல்கி வாழ்கின்ற வீட்டினிற் செல்லாது
குரைநாய்க ளங்கிருக்கும்;
கொடுக்குந் தியாகியுண்டு; இடையூறு பேசும்
கொடும் பாவி யுண்டு; கண்டாய்!
வடுவையுங் கடுவையும் பொருவு மிருகண்ணி குற-
வள்ளிக் குகந்த கணவா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

தீச்சார்பு - கெட்ட சேர்க்கை. கஞ்சம் மலர் - தாமரைப்பூ. வல் + முதலை = வன்முதலை. வல் - கொடிய. மருவி - பொருந்தி. வண்டு - தேனீ. நெடுமை திகழ்-நீட்சியோடு விளங்குகின்ற. நீடு - நீண்ட. நீள் அரவு - நீண்ட ஸர்ப்பம். குடி மல்கி - குடும்பம் பெருகி. தியாகி - வரையாது கொடுப்பவன். இடையூறு - தடை. வடு - மாவடுப்பிளப்பின் உள்வடிவு. கடு - விஷம். கண்கள் ஆசையூட்டி மரணவேதனையைத் தருதலால், அவற்றிற்கு விஷம் உவமையாகக் கூறப்படும். பொருவும் - ஒத்த. உகந்த - விருப்பத்திற்கு இடமான. (37)

[கலிகாலக் கொடுமை]

தாய் புத்திசொன்னால் மறுத்திடுங் காலம்; உயர்
தந்தையைச் சீறு காலம்;
சற்குருவை நிந்தைசெய் காலம்; மெய்க் கடவுளைச்
சற்று மெண்ணாத காலம்;
பேய் தெய்வமென்றுபசரித்திடுங் காலம்;
புரட்டருக் கேற்ற காலம்;
பெண்டாட்டி வையினுங் கேட்கின்ற காலம்; நல்
பெரியர்சொல் கொள்ளாத காலம்;

தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலம்; மிகு
சிறியவன் பெருகு காலம்;
செருவில்விட் டோடினோர் வரிசைபெறு காலம்;
செயபுவோர்க் குதவு காலம்; [வசை
வாய்மதம் பேசிவிடு மரியாயகாரர்க்கு
வாய்ந்த கலிகாலம் ஐயா!
மயிலேறி விளையாடு......குமரேசனே!

சீறு - கோபிக்கின்ற. சத் குரு - சிறந்த ஆசிரியன். புரட்டர் - பேச்சுத்தவறுபவர், வாக்குநாணயமில்லாதவர். தேய்வுடன் - மெலிவோடு. பெருகு - மேன்மை மிகுதியாகப் பெறுகிற. செரு - யுத்தம். வரிசை-பரிசு, வெகுமானம். வசை-நிந்தை, பழிமொழி. வாய்ந்த - ஏற்ற. (38)

[அவரவர்க்கு உரியவை]

கல்வியொடு கனமுறச் சபையின் மேல்வட்டமாக்
கானை வைப்போன் பிதாவாம்;
கற்றுணர்ந்தே தனது புகழாற் பிதாவை ப்ர-
காசஞ்செய்வான் புத்திரன்;
செல்வமிகு கணவனை தெய்வமென் றனுதினம்
சிந்தைசெய்பவள் மனைவியாம்;
சிநேகிதன்போலவே யன்புவைத் துண்மைமொழி
செப்புமவனே சோதரன்;
தொல்வள மிருந்தநூற் கரைதெரிந் துறுதிமொழி
சொல்லுமவனே குரவனாம்;
சொன்னநெறி தவறாமல் வழிபாடு செய்துவரு
துய்யனே யினிய சீடன்;
வல்லிரக மிஞ்சு சுரகுஞ்சரியுடன் குறவர்
வஞ்சியை மணந்த கணவா!
மயிலேறி விளையாடு......குமரேசனே!

கனம் - கௌரவம். மேல்வட்டம் - மேலான நிலைமை, முதன்மையான ஸ்தானம், மகத்துவம். "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து, முந்தி யிருப்பச் செயல்," "மகன் தந்தைக் காற்றும் நன்றி யிவன் தந்தை, என்னோற்றான்கொல் என்னுஞ் சொல்" என்னும் திருக்குறள்களை இங்கு அறிக. செல்வம் மிகு கணவன் - செல்வக்கணவன்; இது, செல்வப்பிள்ளை என்பது போன்றது: மிக்க செல்வம்போன்ற அருமை பெருமை பொருந்திய கணவன் என்க. அநுதினம் - நாடோறும். சிந்தை செய்பவன் - நினைப்பவன். செப்புமவன் - சொல்பவன். சோதரன் - சகோதரன். தொல் - பழைய. வளம் - சொல்வளம், பொருள் வளம். உறுதி மொழி - நன்மையை விளைக்கும் சொல். குரவன் - ஆசாரியன். நெறி - வழி, முறை. வழிபாடு - தொண்டு. தூய்யன்- பரிசுத்தன் இது தூய்மை என்பதன் அடியாக வந்தது. இனிய - சிறந்த. சீடன் - சிஷ்யன். வல் விரகம் - கொடிய ஆசைநோய். மிஞ்சு - மிக்க. சுர குஞ்சரி - தெய்வயானை. வஞ்சி-வஞ்சிக்கொடி போல் மெல்லியவள்; வள்ளி. (39)

[சிறுமையில் பெருமை]

சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
திருமுடியின்மே லிருக்கும்;
திகழ்சிப்பி யுடலிற் சனித்தமுத் தரசரது
தேகத்தின்மே லிருக்கும்;
போற்றியிடு பூச்சியின் வாயினால் பட்டென்று
பூசைக்கு நேசமாகும்;
புகலரிய வண்டெச்சிலான தேன் தேவர்கொள்
புனித வபிடேக மாகும்;
சாற்றிய புலாலொடு பிறந்த கோரோசனை
சவாதுபுழு கனைவர்க்கு மாம்;
சாதியீனத்திற் பிறக்கினுங் கற்றோர்கள்
சபையின் மேல்வட்ட மன்றோ?

மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர
வைத்த மெய்ஞ்ஞான முதலே!
மயிலேறி விளையாடு...... குமரேசனே!

சிறுமையில் பெருமை - பிறப்பினால் தாழ்வு இருப்பினும் குணத்தினால் மேன்மைபெறுதல். திருமுடி - சிறந்த அரசு. திகழ் - விளங்குகின்ற. சனித்த - பிறந்த. போற்றியிடு - (யாவராலுங்) கொண்டாடப்படுகின்ற, பாதுகாத்திடுகின்ற. நேசம் - விரும்பப் படுவது, சிறந்தது. புகல் அரிய - சொல்லுதற்கு அரிய [இழிவுள்ள]; இதை அபிஷேகம் என்பதோடு கூட்டினால், சொல்லுதற்கு முடியாத [பெருஞ்சிறப்பையுடைய] என்று கருத்துப்படும். புனிதம் - பரிசுத்தம். அபிஷேகம் - திருமஞ்சனப்பொருள் சாற்றிய - (இழிவாகச்) சொல்லப்பட்ட; இதை, கோரோசனையோடு சேர்த்தால், (சிறப்பித்துச்) சொல்லப்படுகின்ற என்க. அனைவர்க்கும் - எல்லோர்க்கும். சாதி ஈனத்தில் - ஈனசாதியில். சுரத்தினை மாற்றியென மாற்றுக. முருகக்கடவுள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராய் அவதரித்தபோது, பாண்டியனது மற்றொருவனுந் தீராத சுரத்தை விபூதியினால் நீக்கி, அவனது உடல் குளிரச்செய்தன ரென்பது, வரலாறு. மெய்ஞ்ஞானம் - தத்துவஞானம். "தாமரை பொன் முத்துச் சமரங் கோரோசனை பால், பூமரு தேன் பட்டுப் புனுகு சவ்வா தாமழல்மற், றெங்கே பிறந்தாலு மெள்ளாரே: நல்லோர்க ளெங்கே பிறந்தாலு மென்" என்பது, நீதிவெண்பா. (40)

[செய்யத் தகாதவை]

தானுசரித்துவரு தெய்வமிது வென்று பொய்ச்
சத்தியஞ் செயில் விடாது;
தன்வீட்டி லேற்றிய விளக்கென்று முத்தந்-
தனைக்கொடுத்தா லது சுடும்;
ஆனாலு மேலவர்கண் மெத்தவுந் தனதென்
றடாதது செயிற் கெடுதியாம்;
ஆனைதான் மெத்தப் பழக்கமானாலுஞ் செய்-
யாது செய்தாற் கொன்றிடும்;

தீனை தினிதென்று மீதூண் விரும்பினல்
தேகபீடைகளே தரும்;
செகராசர் சனுவென்ன வேலாத காரியம்
செய்தால் மனம் பொருர்காண்.
வானுடு புகழு மொருசோணுடு தழைய விவண்
வந்தவ தரித்த முதலே!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

ஆசரித்து - வழிபட்டு, பூசித்து. மேலவர்கண் ஆனலும் என்க. மேலவர்கண் - மேலோரிடத்து. மெத்தவும் - மிகவும். தனது என்று - தனக்கு வேண்டியவரே என்று. அடாதது - தகாதது. தினை ஆனது - உணவானது: தின் என்பது தீன் என முதல் நீண்டது. ''மீதூண் விரும்பேல்'' என்ருர் ஔவையாரும். செகராசர் - பூமியையாளும் அரசர். சனு - உதவியாயுள்ளவர், நண்பர். ஏலாத - தகாத. வான் நாடு - சுவர்க்கலோகத்திலுள்ள தேவர்கள். ஒரு சோணுடு தழைய - ஒப்பற்ற சோழநாடு செழிப்பும் சிறப்பும் அடையும்படி. இவண் - இவ்விடத்தில். (41)

[நடுவு நிலைமை]

வந்த விவகாரத்தி லினிய பரிதானங்கள்
வருமென்றும், நேச ரென்றும்,
வன்பகைஞரென்றும், அயலோரென்றும், மிக்க
வாரெனன்றும், ஏழை யென்றும், [தன-
இந்தவகையைக்குறித் தொருபட்சபாத மோர்
எள்ளள வுரைத்திடாமல்,
எண்ணமுடனே சிகிதபுத்தியொடு சாக்ஷிக்கும்
ஏற்கச், சபாசமதமா,
முந்த விருதலையும் சமன்செய்த கோல்போல்
மொழிந்திடிற் றர்மமதுகாண்.
முனைவிம னுடல்பாதி மிருகந்தனக்கென்று
முன் றருமர் சொன்னதலைவா!

மைந்தனென வன்றுமை முலைப்பால் கொடுத்திட
வளர்ந்தருள் குழந்தை வடிவே!
மயிலேறி விளையாடு.........குமரேசனே!

நடுவுநிலைமை - நண்பர் பகைவர் அயலார் என்னும் மூன்று வகையாரிடத்தும் பக்ஷபாதமில்லாமல் சமமாக நிற்கும் நிலைமை; மத்தியஸ்தம். விவகாரம் - வ்யவஹாரம்; வழக்கு. இனிய பரிதானங்கள்-விரும்பத்தக்க லஞ்சப்பொருள்கள். நேசர் - நண்பர். வல் பகைஞர் - கொடிய பகைவர். எண்ணமுடனே - வாதிப்ரதிவாதிகளுடைய மனத்தின் நினைப்புக்கும். லிகித புத்தியொடு - எழுத்துமூலமான ஆதாரங்களால் அறியப்படுகிற விஷயத்துக்கும். ஸாக்ஷிக்கும் - சாக்ஷிகள் சொன்ன வாக்குமூலத்திற்கும். சபா சம்மதம் ஆ - நியாயசபையில் உள்ளவரெல்லோர்க்கும் சம்மதமாயிருக்கும்படி. முந்த இருதலையும் சமன்செய்த கோல்போல் - முன்னே (தான் ஒருபக்கத்திலும் சாயாமல்) சமமாய் நடுநின்ற துலாக்கோல் (பின்பு தன்னிடம் வைக்கப்பட்ட பாரத்தை உள்ளபடி உணர்த்துதல்) போல. மொழிந்திடின் - சமமாய்நின்று தீர்ப்புக்கூறினால். முனை வீமன் - வலிமையையுடைய வீமசேனன். "முன் தருமர் சொன்ன தலைவா" -கதை கேட்டறிக. "சமன் செய்து சீர் தூக்குங் கோல்போ லமைந்தொருபால், கோடாமை சான்றோர்க் கணி" என்பது, திருக்குறள். (42)

[பக்ஷ பாதம்]

ஓர்விவகாரமா வந்தவர் முகம்பார்த்
துரைப்போர் மலைக்குரங்காம்;
உயர்வெள் ளெருக்குடன் முளைத்துவிடுமவரில்லம்;
உறையுமூர் பாழ்நத்த மாம்;
தாரணியி லிவர்கள்கிளை நெல்லியிலைபோ லுகும்;
சமானமா வெழுபிறப்பும்
சந்ததியிலா துழல்வர்; அவர்முகத்தினின் மூத்
தையலே குடியிருப்பாள்;

பாரபக்ஷ வரென்று புவிமங்கையும் நடுங்குவாள்;
பழித்த துர்மரண மாவார்;
பகர்முடிவிலே ரவுரவாதி நரகத் தனு-
பவிப்ப ரெப்போது மென்பார்.
வாரமுட னருணகிரிநாதருக் கனுபூதி
வைத்தெழுதி யருள் குருபரா!
மயிலேறி விளையாடு.........குமரேசனே!

ஓரம் விவகாரம் - பக்ஷபாதமான வழக்குத்தீர்ப்பு. இல்லம்-வீடு. உறையும் - வசிக்கும் தாரணி - தரணி; பூமி. கிளை - உறவினர். உகும் - உதிர்ந்துவிடும்; அழிந்துவிடும். உழல்வர் - அலைவார்கள். மூத்த தையல் - மூதேவி. புவி மங்கை - பூமிதேவி. பகர் முடிவிலே - சொல்லப்படும் அந்திய காலத்தில்; உயிர் உடலை விட்டு நீங்கியபின்னர்; மறுமையில். ரவுரவம்—ரௌரவம்: இது ஓர் நரக விசேஷம். வாரமுடன் - அன்புடன். அருணகிரிநாதர் என்பவர் திருப்புகழ் முதலிய நூல்களை இயற்றியருளிய ஓர் மகான். அநுபூதி - கந்தரநுபூதி யென்னும் நூல் என்பர். "வேதாளஞ் சேருமே; வெள்ளெருக்குப் பூக்குமே; பாதாளமூலி படருமே; - மூதேவி, சென்றிருந்து வாழ்வளே; சேடன் குடி புகுமே; மன்றோரஞ் சொன்னார் மனை" என்னுஞ் செய்யுளின் கருத்து இச்செய்யுளில் வந்துள்ளமை காண்க. (43)

[அளவு படாதவை]

வாரியாழத்தையும், புனலெறியு மலைகளையும்,
மானிடர்கள் சனனத்தையும்,
மன்னவர்க ணினைவையும், புருஷர்யோகங்களை
வானி னுயர்நீளத்தையும், [யும்,
பாரிலெழு மணலையும், பலபிராணிகளையும்,
படியாண்ட மன்னவரையும்,
பருப்பதத்தின் னிறையும் ஈசுரர் செயலையும்,
பனிமாரி பொழிதுளியையும்,

சீரிய தமிழ்ப்புலவர் வாக்கிலெழு கவியையும்,
சித்தர்தம தன்னத்தையும்,
தெரிவையர்கள் சிந்தையையும், இவ்வளவெனும்
தெரிந்தளவிடக் கூடுமோ? [படி.
வாரிச மடந்தை குடிகொண்ட நெடுமாலுக்கு
மருகனென வந்த முருகா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

வாரி - வாரிதி; கடல். புனல் எறியும் - அருவிநீரைச் சொரி இற சனனம் - பிறப்பு. பாரில் - பூமியில். படி - பூமி. பருப்பதம்-பர்வதம். மாரி - மழை. சீரிய - சிறந்த. சித்தர் - சித்திபெற்ற பெரியோர்கள். தெரிவையர்கள் - மகளிர். வாரிசம் மடந்தை - செந்தாமரைமலரில் வாழ்கின்ற இலக்குமி. நெடுமால் - மஹா விஷ்ணு. (44)

[மானம் விடாமை]

கனபார மேறிற் பிளந்திடுவ தன்றியே,
கற்றூண் வளைந்திடாது;
கருதலர்களா லுடைந்தாலும், உயிரளவிலே
கனசூர னமரின் முறியான்;
தினமோரிடுக்கண் வந்தாற்று மும், வேங்கைதோல்
சிவப்பளவிற் கொடாது;
திடமான பெரியோர் சரீரங்கள் போகினும்,
செப்புமுறை தவறிடார்கள்;
வனமேறு கவரிமா னுயிர்போகுமளவும், தன்
மயிரி லொன்றுங் கொடாது;
வாராத வாபத்து வருகினும், கற்புடைய
மாது நிறை தவறி நடவாள்.

மனதார வுனதடைக்கல மென்ற கீரற்கு
வன்சிறை தவிர்த்த முருகா!
மயிலேறி விளையாடு....... குமரேசனே!

கனம் பாரம் எதின் - அதிகபாரம் ஏற்றப்பட்டால் இறுவது - ஒடிவது. கல் + தூண் = கற்றூண். கருதலர்கள் - பகைவர்கள் உடைந்தாலும் - அழிவுநேர்ந்தாலும், கஷ்டப்பட்டாலும். உயிர் அளவிலே - பிராணன் உள்ளவரையில். கன சூரன் - மிக்க சூரத்தன்மையுள்ளவன் அமரில் - போரில். முறியான் - பின்னிடான்; தோற்றோடான். இடுக்கண் - துன்பம்; இது, இடுக்குகண் என்பதன் மரூஉமொழி. துன்பம் நேர்ந்தால் கண் இடுக்குதல் இயல்பு வந்து உற்றாலும் - வந்து நேர்ந்தாலும். சீவன் அளவில் - உயிர் உள்ள வரையில். திரம் ஆன பெரியோர் - (ஒழுக்கங்களில்) உறுதியுள்ள மேலோர். செப்பும் - சொல்லும். வனம் ஏறு - அழகு மிக்க. கவரி மான் - சமரீமிருகம், கவரியென்னும் மான். நிறை - கற்புநிலைமை. மனது ஆர - மனப்பூர்வமாக, மனப்பூர்த்தியாக. அடைக்கலம் - சரணம். கீரற்கு - நக்கீரனுக்கு. வல் சிறை - கொடிய சிறையிலிருப்புத்துன்பம்; கதை கேட்டறிக. "உற்றவிடத்தில் உயிர் வழங்குந் தன்மையோர், பற்றலரைக் கண்டால் பணிவரோ? கற்றூண் - பிளந்திறுவதலால், பெரும்பாரந் தாங்கின், தளர்ந்து வளையுமோ தான்?", "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார், உயிர் நீப்பர் மானம் வரின்" என்பன இங்குக் காண்க.

(45)

[திருவருட் சிறப்பு]

திருமகள் கடாட்ச முண்டானால், எவர்க்கும்
சிறப்புண்டு; கனதையுண்டு;
சென்றவழியெல்லாம் பெரும்பாதையாய்விடும்;
செல்லாத வார்த்தை செல்லும்;
பொருளொருதுரும்பு; மரியாதையாம்; செல்வமோ,
புகல் பெருக்காறு போலாம்;
[illegible]ின் முன் கண்டு மதியாதபேர், பழகினவர்-
[illegible] நேச மாவார்;

பெருமையொடு சாதியி னுயர்ச்சிதரும்; அனுதினம்
பேரும் ப்ரதிஷ்டையு முறும்;
பிரியமொடு பகையாளிகூட வுறவாகுவான்;
பேச்சினிற் பிழை வராது;
வருமெ   த்தபொருள் கைகூடிவரும்; அதிக
வல்லமைகண் மிகவு முண்டாம்.
மயிலேறி விளையாடு........குமரேசனே!

திரு அருள் சிறப்பு - இலக்குமியினது கிருபையின் மகிமை. திருமகள் கடாக்ஷம் - இலக்குமியின் அருட்கடைக்கண்ணின் நோக்கம் சனைதை - கௌரவம். பாதை - வழி புகல் பெருந்து ஆறுபோலாம் - சிறப்பித்துச் சொல்லப்படும் ஆற்றுப்பெருக்குப் போல மேன்மேல் பெருகும். அனுதினம் - நாடோறும். உறும் - பொருந்தும். (16)

[நட்பு நிலை]

கதிரவ னுதிப்பதெங்கே? கமலமெங்கே?
களித்துள மலர்ந்ததென்ன!
கார்மேக மெங்கே? பசுந்தோகை யெங்கே?
கருத்தில் நட்பானதென்ன!
மதிய மெங்கே? பெருங்குமுதமெங்கே? முகம்
மலர்ந்து மகிழ்கொண்டதென்ன!
வல்லிரவு விடிவதெங்கே? கோழி யெங்கே?
மகிழ்ந்து கூவிடுதலென்ன!
நித்யராச ரெங்கேயிருந்தாலும்; அவர்க்கொடு
நேச மொன்றாயிருக்கும்;
நிருமித்த நல்லோர்க ளெங்கிருந்தாலும், அவர்
நினைபட்ச மறவார்கள்காண்.
மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவு சோலைப் பதியனே!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

நட்பு நிலை - சிநேகத்தின் நிலைமை. கதிரவன் - சூரியன். நளினம் - தாமரை. உளம் களித்து - மனம் மகிழ்ந்து. என்ன - என்ன ஆச்சரியம். கார் மேகம் - கருநிறமுள்ள மேகம். பசுந் தோகை - பசுமைநிறமுள்ள மயில். மதியம் - சந்திரன். பெருங் குமுதம் - சிறந்த ஆம்பல். மகிழ் - மகிழ்ச்சி. வல் இரவு - கொடிய பயங்கரமான இராப்பொழுது. நிதி - செல்வக்குவியல். நிறை பக்ஷம் - நிறைந்த அன்பு. வானத்தில் நெடுந்தூரத்திலுள்ள பொருள்களுக்கும் பூமியிலுள்ள பொருள்களுக்கும் ஒன்றுக்கு ஒன்று சிநேககுணம் மிகுதல்போலவே, உலகத்தில் நல்லோர் எவ்வளவுதூரத்தில் இருந்தாலும் அவர்களுக்குச் சிநேகம் மிகுதல் இயல்பு என்பதாம். இரவு விடிவது எங்கும் உள்ளதாயினும், அதற்குக் காரணமான சூரியனது தோற்றம் வானத்திலுள்ளதுபற்றி, அதனை நெடுந்தூரத்ததுபோலக் கூறினார். வாவி - தடாகம். புடைசூழ - பக்கங்களிலெல்லாஞ் சூழ்ந்திருக்க. மருவு - பொருந்திய. சோணாடு - சோழநாடு; மரூஉ மொழி. இங்குத் திருப்புல் வயற்கடவுளை 'சோணாட்டதிபனே' என்றதுகொண்டு, திருப்புல் வயல் சோழநாட்டிலுள்ளதென்று அறியலாம். (47)

[காலமறிதல்]

காகம், பகற்காலம் வென்றிடுங் கூகையைக்;
கனகமுடி யரசர் தாமும்,
கருது சயகாலமது கண்டந்தவேளையில்
காரிய முடித்துவிடுவார்;
மேகமும், கார்காலமது கண்டு, பயிர் விளைய
மென்மேலும் மாரி பொழியும்;
மிக்கான வறிவுளோர், வருதருணகாலத்தில்
மிடியாளருக் குதவுவார்;
நாகரிகமுறு குயில், வசந்தகாலத்திலே
நலமென் றுகந்து கூவும்;
நல்லோர், குறித்ததைப் பதறுமலந்தந்த
நாளையின் முடிப்பர் கண்டாய்.

'வாகனைய காலை கல், மாலை புல்' எனுமுலக்
வாடிக்கை நிசமல்லவோ!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

கூகை - கோட்டான். கனகம் - பொன். முடி - கிரீடம். கருது சய காலம் - வெற்றி கிடைக்குமென நினைத்த சமயம். "பகல் வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்; வேந் தர்க்கு வேண்டும் பொழுது" என்னும் திருக்குறளை இங்கே அறிக. கார்காலம் - மழைக்காலம். மாரி - மழை. மிக்கு ஊன - மிகுதியான. தருணகாலத்தில் - தக்க காலத்தில், துன்பமுற்ற காலத்தில். மிடியாளர் - தரித்திரர். உறு - பொருந்திய. வசந்த காலம் என்பது - சித்திரையும் வைகாசியுமாகிய இளவேனிற் பருவம். நலம் - நன்மை, மேன்மை. உகந்து - விரும்பி. வாகு அனைய காலை கல் - அழகிய அத்தகைய [சிறப்புப்பொருந்திய] இளமைப்பருவம் அறஞ்செய்தற்கு உறுதியானது. மாலை புல் - முதுமைப்பருவம் அற்பமானது. 'காலை கனம்' என்பது பாடம். "காலைச் செய்வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச், சாலச் செய்வாரே தலைப்படுவார்;—மாலை, கிடந்தா னெழுத லரிதால்; மற்றென்கொல், அறங் காலை செய்யாத வாறு?" என்னுஞ் செய்யுளில், காலை மாலை என்னுஞ் சொற்கள் இளமை முதுமை யென் னும் பொருளையே தந்துநின்றமை காண்க. உலகவாடிக்கை - உலகத்தார் வழங்கும் பழமொழி. (48)

[இடன் அறிதல்]

தரையதனி லோடுதேர் நீள்கடலி லோடுமோ?
சலதிமிசை யோடு கப்பல்
தரைமீதி லோடுமோ? தண்ணீரி லுறு முதலை
தன்முனே கரி நிற்குமோ?
விரைமலர்முடிப் பாமர் வேணியாவினை வெல்ல
மிருகருட னாகுமோ?
வேங்கைக விருக்கின்ற காடுதனி லஞ்சாமல்
வேறொருவர் செல்ல வசமோ?

துணைகளைப் பெரியோரை யண்டிவாழ்வோர் தமைத்
துட்டர்பகை யென்னசெய்யும்?
துணைகண்டு 'சேரிட மறிந்துசேர்' என்றவ்வை
சொன்னகதை பொய்யல்லவே!
வனையூது மாயனை யடுத்தலாற் பஞ்சவர்கள்
வன்போர் சயித்த தன்றோ?
மயிலேறி விளையாடு ......குமரேசனே!

இடன் அறிதல் - ஸ்தானபலத்தின் தன்மையை அறிவது. நீள் கடல் - பெரிய சமுத்திரம். சலதியிசை - கடலின்மீது சரி-யானை. விரை மலர் முடி பாமர் - வாசனையுள்ள மலர்மாலையைச் சூடிய திருமுடியையுடைய சிவபிரான். வேணி - சடை. மிகு கருடன் - (பக்ஷிகட்குச்) சிறந்த அரசனாகிய கருடன். "மெலியோர் வலிய விரவலரை யஞ்சார், வலியோர் தமைத் தாம் மருவில்;— பலியேல் - கடவு ளவிர்சடைமேற் கட்செவி யஞ்சாதே, படர் சிறையப் புள்ளரசைப் பார்த்து" என்பது, நன்னெறி. வேங்கைகள் - வேங்கைப்புலிகள். சேர் இடம் அறிந்து சேர் - சேரத்தக்க நல்ல இடத்தை ஆராய்ந்தறிந்து பிறகு சேர்; நல்ல இடத்தை என்பது, நல்ல பெரியோர்களைக் குறிக்கும். வனை - மூங்கில்; இது இந்தப் புள்ளாங்குழலைக் குறிக்கும். மாயன் - ஆச்சரியகரமான குணஞ்செயல்களையுடைய திருமாலின் திருவவதாரமாகிய கண்ணபிரான். பஞ்சவர்கள் - பாண்டவரைவர். வல் போர் - கொடிய யுத்தம்.

(49)

[வேட்டகத் திகழ்ச்சி]

வேட்டகந்தன்னிலே மருகன் வந்திடுமளவில்,
மேன்மேலு முபசரித்து,
விருந்துகள் சமைத்து, நெய் பால் தயிர் பதார்த்த
வேண்டுவ வெலா மமைப்பார்; [வகை
ஊட்டமிகு வர்க்கவகை செய்திடுவர்; தைலமிட்
டுறுதியாய் முழுகுவிப்பார்;

ஓயாது நின்னையே பாக்கிலை கொடுத்திடுவர்;
உற்றநாள் நாலாகிலோ,
நாட்டமொருபடி பிறந்துவதுபோன் மரியாதை
நாளுக்கு நாள் குறையுமாம்;
நகைசெய்வர் மைத்துனர்கள்; 'அலுவல்பார்; போ,'
நாணமல் மாமி சொல்வாள்; [என்று
வாட்டமனையா ளொருதுரும்பாய் மதிப்பள். அவன்
மட்டியிலு மட்டியன்றோ?
மயிலேறி விளையாடு.......குமரேசனே!

வேட்டகம் = வேட்ட அகம்; ஈற்று அகரம் தொக்கது; கலியாணஞ் செய்துகொண்ட இடம். வேட்டகத்து இகழ்ச்சி - ஒருவன் தான் மணம் புரிந்துகொண்ட பெண்ணின் தாய்தந்தையர்களது வீட்டில் பலநாள் இருப்பதனால் உண்டாகும் அகௌரவம். மருகன் - மருமகன். பால் + தயிர் = பாறயிர் என்று புணரும். ஊட்டம்மிகு - உண்பித்தற்கு உரிய: சிறந்த. உறுதியாய் - நன்றாக. இலை - வெற்றிலை. உற்ற - பொருந்திய. நாள் + நாலாகிலோ = நாணாலாகிலோ. நாட்டம் - விருப்பம். நகை செய்வர் - பரிகாசஞ்செய்வர். நாணமல் - வெட்கமில்லாமல், கூச்சமில்லாமல். வாட்டம் மனையாள் - மெலிவுங் குறைவுமுடைய மனைவியும்.

[செல்வம் நிலையாமை]

ஓடமிடு மிடமது மணற்சுடும்; சுடுமிடமும்
ஓட மிகவே நடக்கும்;
உற்றதோ ராற்றின்மடு மேடாகும்; மேடெலாம்
உறுபுனல்கொண் மடுவாயிடும்;
நாடு காடாகும்; உயர்காடு நாடாகிவிடும்;
நவில் சகடு மேல் கீழதாம்;
நடையூறு சந்தைபல கூடும்; உடனே [illegible]
நன்னிலவு மிருளாய்விடும்;

நீடுபகல் போயபின் இரவாகும்; இரவுபோய்
நிறைபகற் போதாய்விடும்;
நிதியோர் மிடிந்திடுவர்; மிடியோர் செழித்திடுவர்;
நிசமல்ல வாழ்வு; கண்டாய்.
மாடு, மனை, பாரி, சனம், மக்கள், நிதி, பூஷணமும்
மருவுகன வாகுமன்றோ?
மயிலேறி விளையாடு........குமரேசனே!

செல்வம் நிலையாமை - செல்வத்தின் நிலையில்லாத தன்மை. உற்றது - பொருந்திய. உறு புனல் - மிக்க நீர். நவில் சகடு - சொல்லப்படும் வண்டிச்சக்கரம். நடை ஊடாறு (மனிதர்) நடையாடுகின்ற. நல் நிலவு - நல்ல நிலாக்காலம். நீடு பகல் - சிறந்த பகற்காலம். நிறை பகல் - (ஒளி) நிறைந்த பகல். மிடிந்திடுவர் - தரித்திரப்படுவர். மிடியோர் - தரித்திரர். செழித்திடுவர் - செல்வமுடையவராவர். பாரி - பார்யை. சனம் - உறவினர். மக்கணிதி - மக்கள் நிதி. மருவு - பொருந்திய. ''அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம், சகடக்கால் போல வரும்'', ''ஆறிடு மேடு மடுவும்போலாம் செல்வம்; மாறிடு மேறிடும்'' என்பன காண்க. (51)

[பிறந்தார் பெறும் பேறு]

சடமொன் றெடுத்தால், புவிக்கு நல்லவனென்று
தன்பேர் விளங்கவேண்டும்;
சதிருட னிதல்லாது, மெய்ஞ்ஞானியென் றவ—
தரிக்கவேவேண்டும்; அல்லால்,
திடமினிய ரணசூர வீரனிவ னென்னவே
திசை மெச்சவேண்டும்; அல்லால்,
கதியென்ன வருபவர்க் கில்லையென் னாமலே
செய்யவேவேண்டும்; அல்லால்,
அடைவுடன் பலகல்வி யாராய்ந்து வித்துவா
னாகவேவேண்டும்; அல்லால்,
அறிவான துரைமக்களாக வரவேண்டும்; இவர்
அதிகபூபாலர். ஐயா!

வடகுவடு கிடுகிடென வெழுகடலு மலையெறிய
மணியுரகன் முடிகள் நெரிய
மயிலேறி விளையாடு........குமரேசனே!

பிறந்தார் பெறு பேறு - மனிதசன்ம மெடுத்தவர் பெற வேண்டிய பாக்கியம். சடம் - உடல். புவிக்கு - பூமியிலுள்ளார்க்கு. இது சதிருடனல்லாது என மாற்றுக; இக்குணத்துடன் அல்லது என்று பொருள் கொள்க; சதிர் - குணம், திறம். திடம் இனிய - வலிமையிற் சிறந்த. ரணசூர வீரன் - போர்புரியத்தக்க சௌரியமும் வீரமுமுள்ளவன். திசை - திசையிலுள்ளார். தேகி - கொடு. செய்யவே வேண்டும் - (பொருள் கொடுத்துதவுதலைச்) செய்யவேண்டும். அடைவுடன் - முறைப்படி. இவர் - இப்படிப் பட்டவர். அதிக பூபாலர் - சிறந்த அரசர், அரசரினுஞ் சிறந்தவர். வடகுவடு - வட திசையிலுள்ள மேருமலை. அலை எறிய - அலை வீச. மணி உரகன் முடிகள் - மாணிக்கமுள்ள ஆதிசேடனென்னும் சர்ப்பராஜனது சிரங்கள். ஆதிசேடன் பூமியைக் கீழிருந்து தாங்குகின்றானென்பது, பழையநூற் கொள்கை. (52)

[வறுமையிற் சிறுமை]

வறுமைதான் வந்திடில், தாய் பழுதுசொல்லுவாள்;
மனையாட்டி சற்று மெண்ணாள்;
வாக்கிற் பிறக்கின்ற சொல்லெலாம் பொல்லாத
வசனமாய் வந்து விளையும்;
சிறுமையொடு தொலையா விசாரமே யல்லாது,
சிந்தையிற் றைரிய மில்லை;
செய்ய சபைதன்னிலே சென்றுவர வெட்கமாம்;
செல்வரைக் காணி னாணும்;
உறுதிபெறு வீரமுங் குன்றிடும்; விருந்துவரில்
உயிருடன் செத்த பிணமாம்;
உலகம் பழித்திடும்; பெருமையோர் முன்புசென்
றொருவரொடு செய்தி சொன்னால்,

மறுவசனமுஞ் சொலார்; துன்பினிற் றுன்பமிது
வந்தணுகிடா தருளுவாய்.
மயிலேறி விளையாடு....... குமரேசனே!

வறுமையில் சிறுமை - பொருளில்லாமையால் உண்டாகும் தாழ்வுகள். வறுமை - தரித்திரம். பழுது - குற்றம். மனையாட்டி - மனைவி. சிறுமை - எளிமை. சிந்தையில் - மனத்தில். செய்ய சபைதன்னிலே - நல்ல சபையிலே. நாணும் - நாணமடைவான். குன்றிடும் - குறைந்துபோம். உயிருடன் செத்த பிணமாம் - உயிரோடிருக்கையிலேயே உயிர்நீங்கின உடம்புபோலச் செயலற்றிருப்பான். உலகம் - உலகத்திலுள்ள சனங்கள்; இது, இடவாகுபெயர். மறு வசனம் - பதிலுத்தரம். துன்பினில் துன்பம் இது வந்து அணுகிடாது - துன்பங்கள் எல்லாவற்றினும் மிக்க துன்பத்தைத் தருவதான இத்தரித்திரம் (யார்க்கும்) வந்து சேராதபடி. அருளுவாய் - கருணை செய்வாய். "கல்லானே யானாலும், கைப்பொருளொன் றுண்டாயின், எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்;—இல்லானை, இல்லாளும் வேண்டாள்; மற்றீன்றெடுத்த தாய் வேண்டாள்; செல்லா தவன்வாயிற் சொல்" என்றார் ஔவையாரும். (53)

[தீச்சார்பால் நன்மையிழப்பு]

ஆனை தன்னீரி னிழல்பார்த்திடத் தவளைசென்
றங்கே கலக்கி யுலவும்;
ஆயிரம்பேர்கூடி வீடுகட்டிடி லேதம்
அறைகுறளு முடனே வரும்;
ஏனை நற்பெரியோர்கள் போசனஞ் செயுமளவில்
ஈக்கிடந் திசை கேடதாம்;
இன்பமிகு பசுவிலே கன்றுசென் றூட்டுதற்
கினியகோ னது தடுக்கும்;
சேனை மன்னவ ரென்ன கருமம் நியமிக்கினும்
சிறியோர்களாற் குறைபடும்;
சிங்கத்தையும் பெரிய விடபத்தையும் பகைமை
செய்த தொருநரி யல்லவோ!

மானையுந் திகழ் தெய்வயானையுந் தழுவு மணி
மார்பனே! அருளாளனே!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

தீச்சார்பால் - கெட்ட சேர்க்கையால். பார்த்திட அதற்கு இடையூறாக எனக் கூட்டிக் கொள்க. "சிறிய பகை [illegible] ஓம்புதல் தேற்றார், பெரிதும் பிழைபாடுடையர்; — இறை [illegible] தாழ் நீர் மடுவிற் றவளை குதிப்பினும், யானை நிழல்காண் [illegible]" என்னும் நீதிநெறிவிளக்கச்செய்யுள் இங்குக் காணத்தக்க[illegible]. உலவும் - உலாவும். ஏதம் அறை குறள் - பழித்துச் சொல்[illegible] படுகின்ற மோதுந் தன்மையுள்ள பேய். 'ஏதம்' என்று பா[illegible]மாயின், அதற்கு - ஒன்று என்பது பொருள். இனி, 'ஏதம் அறை குறள்' என்பதற்கு - (அவ்வீட்டிற்குக்) குற்றஞ்சொல்லுகிற குறளன் என்று பொருள் கூறுவாருமுளர்: குறளன் - குள்ளன், கோட்சொல்பவன். ஏனை - மற்றும். ஈ கிடந்து இசைகேடதாம் - (போஜனத்தில்) ஈ விழுந்து பழிப்புக்கிடமாம். இனிய கோன் - (பசுக்காத்தலிற்) சிறந்த (பசுவிற்குத்) தலைவனாகிய இடையன். கருமம் - காரியம்; இது, இங்கு நற்காரியத்தைக் குறிக்கும். நியமிக்கினும் - கட்டளையிட்டாலும் இடபம் - எருது. நரி சிங்கத்திற்கும் இடபத்திற்கும் பகையூட்டிய வரலாற்றைப் பஞ்சதந்திரத்தில் மித்திரபேதத்திற் காண்க. மானையும் - மானின் மகளாகிய வள்ளியையும்; அன்றி, மான்கண் போலும் கண்ணையுடைய வள்ளியையும் எனினுமாம். திகழ் - விளங்குகின்ற. அணி மார்பன் - அழகிய மார்பையுடையவன். அருளாளன் - கருணையையுடையவன். (54)

[இடையூற்றும் பயன்படுபவை]

ஆறு தண்ணீர் வற்றிவிட்டாலு மூற்றுநீர்
அமுதபானங் கொடுக்கும்;
ஆதவனை யொருபாதி கட்செவி மறைத்தாலும்
அப்போது முதவி செய்வன்;

கூறுமதி தேய்பிறைய தாகவே குறையினும்
குவலயத் திருள் சிதைக்கும்;
கொல்லைதான் சாவிபோய் விட்டாலு மங்குவரு
குருவிக்கு மேய்ச்ச லுண்டு;
வீறுடனுதாரிதான் மிடியான போதிலும்
மிகநாடி வருபவர்க்கு
வேறுவகை யில்லையென் றுரையா தியன்றது
வியந் துளமகிழ்ந் துதவுவான்.
மாறுபடு சூர சங்கார! கம்பீரனே!
வடிவே லணிந்த முருகா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

இடையூறு உற்றும் - துன்பமடைந்தாலும். அமுத பானம் - அமுதம்போல் இனிய பானம்; பானம் - குடிக்கத்தக்கது. ஆதவன் - சூரியன். கட்செவி - பாம்பு; இது, இங்கு, இராகுகேதுக்களைக் குறிக்கும். கூறும் மதி - (சிறப்பித்துச்) சொல்லப்படும் குணமுடையவனாகிய சந்திரன். குவலயத்து - பூமியில். சிதைக்கும் - அழிக்கும், நீக்கும். வீறுடன் உதாரி - மிக்க சிறப்புடன் கூடிய ஈகைத்தன்மையையுடையோன். மிடி - தரித்திரம். நாடி - தேடி, விரும்பி. இயன்றது - (தன்னால்) கூடியது. வியந்து - கொண்டாடி. உளம் - உள்ளம், மனம். மாறுபடு - பகைமை கொண்ட. சூர சங்கார - சூரபத்மனைச் சங்கரித்தவனே! "ஆற்றுப் பெருக்கற் றடிசுடு மந்நாளு மவ்வாறு, ஊற்றுப்பெருக்கா லுலகூட்டும்: ஏற்றவர்க்கு, நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராயினும், இல்லையெனமாட்டா ரிசைந்து", "ஒருபுடை பாம்பு கொளினு மொருபுடை, அங்கண்மாஞாலம் விளக்குறூஉந் திங்கள்போல், செல்லாமை செவ்வனேர் நிற்பினு மொப்புரவிற்கு, ஒல்கார் குடிப்பிறந்தார்" என்னுஞ் செய்யுள்களின் கருத்து இங்கு உள்ளமை காண்க.

(55)

[நற்புலவர் தீப்புலவர் செயல்]

மிக்கான சோலையிற் குயில்சென்று மாங்கனி
விருப்பமொடு தேடி நாடும்;
மிடை கருங்காகங்க ளெக்கனி யிருந்தாலும்
வேப்பங்கனிக்கு நாடும்;
எக்காலும் வரிவண்டு பங்கேருகத்தினில்
இருக்கின்ற தேனை நாடும்;
எத்தனை சுகந்தவகை யுற்றாலு முருள்வண்-
டினந் தூர்மலத்தை நாடும்;
தக்கோர் பொருட்சுவைநயங்க ளெங்கேயென்று
தாம் பார்த் துகந்து கொள்வார்;
தாழ்வான வன்கண்ணர் குற்றமெங்கே யென்று
தமிழி லாராய்வர் கண்டாய்.
மைக்காவிவிழிமாது தெய்வானையுங் குறவர்
வள்ளியுந் தழுவு தலைவா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

நற்புலவர் - நற்குணமுள்ள வித்துவான்கள். தீப்புலவர் - கெட்டகுணமுள்ள வித்துவான்கள். மிக்கு ஆன - (செழிப்பு) மிகுதியாய்ப் பொருந்திய. நாடும் - ஆராயும். மிடை - (கூட்டமாய்) நெருங்கியிருக்குந்தன்மையுள்ள. எக்காலும் - எப்போதும். வரி வண்டு - இசைபாடும் வண்டு; இனி, வரி - கோடுகளுமாம். பங்கேருகம் - தாமரைமலர். நாடும் - தேடி விரும்பியடையும். சுகந்தம் - நல்ல வாசனை. உற்றாலும் - பொருந்தியிருந்தாலும். தக்கோர் - மேலோர். பொருள் சுவை நயங்கள் - பொருளில் உள்ள சுவையும் நயமும். வன்கண்ணர் - கொடியவர். தமிழில் - தமிழ்நூல்களில். மை காவி விழி மாது - மை இட்டப்பெற்றவையும், கருங்குவளைமலர் போன்றவையுமாகிய கண்களையுடைய பெண். குறவர் வள்ளி - குறவரது குடியில் வளர்ந்த வள்ளி. ''உண்டு குணமிங் கொருவர்க் கெனினும், கீழ் கொண்டுபுகல்வ

தவர்குற்றமே;—வண்டு, மலர்ச், சேக்கை விரும்பும்; செழும் பொழில்வாய் வேம்பன்றோ, காக்கை உகக்குங் கனி?" என்பது நன்னெறி. (56)

[தாழ்தற் பெருமை]

வேங்கைகள் பதுங்குதலும், மாமுகி லொதுங்கு-
விரிசிலை குனிந்திடுதலும், [தலும்,
மேடம தகன்றிடலும், யானைக ளொடுங்குதலும்,
வெள்விடைக டள்ளி விழலும்,
மூங்கில்கள் வணங்குதலும், மேலவ ரிணங்குதலும்,
முனிவர்க ணயந்துகொளலும்,
முதிர படை யொதுங்குதலும், வினைஞர்க ளடங்கு-
முதலினர் பயந்திடுதலும், [தலும்,
ஆங்கரவு சாய்ந்தலும், மகிழ்மல ருலர்ந்திடலும்,
ஆயர்குழல் ஊடுபடலும்,
அம்புவியி லிவை காரியங்களுக் கல்லாமல்,
அதனு லிளைப்பு வருமோ?
மாங்கனிக்கா வரனை வலமதுபுரிந்து வளர்
மதகரிக் கிளைய முருகா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

தாழ்தல் பெருமை - கீழ்ப்படிதலால் பெருமையுண்டாதல். மாமுகில் - பெரிய சிறந்த மேகங்கள். ஒதுங்குதல் - விலகிச் செல்லுதல். விரிசிலை - பெரிய விற்கள். மேடம்அது அகன்றிடலும் - ஆடுகள் விலகிப் பின்னே செல்லுதலும். ஒடுங்குதல் - அடங்கியிருத்தல். வெள் விடைகள் - வெண்மையான எருதுகள். மேலவர் இணங்குதலும் - (வல்லமையிற்) பெரியோர் அதிற் சிறியாரோடு சந்தியாதற்கு இசைதலும். முனிவர்கள் நயந்து கொளலும் - (கோபங்கொண்டு சபிக்கத்திறமுள்ள) முனிவர்கள் (அங்ஙனஞ் செய்யாது) அன்புகொண்டு நடத்தலும். முதிர்படை - வலிமை மிக்க சேனைகள். வினைஞர்கள் - தொழில்திறமுள்ளவர்கள்,

காரியக்காரர்கள். முதலினர் பயந்திருத்தலும் - தலைமைபெற்ற அதிகாரிகள் (தமக்குக் கீழ்ப்பட்டவர்க்கு) அஞ்சுதலும். ஆம் கரவு சாய்குதலும் - பெரிய முதலைகள் தலைசாய்ந்திருத்தலும். ஆங்கு அரவு எனப்பிரித்து, ஆங்கு என்பதை அசையெனக்கொண்டு, அரவு சாய்குதல் என்பதற்கு - பாம்பு தலைசாய்தல் என்றும் பொருள்கொள்ளலாம்; பாம்பு தலைசாய்தல் - பின்பு படமெடுத்துக் கடித்தற்கு. மகிழ்மலர் - மகிழம்பூ. ஆயர்குழல் குடிபடலும் - இடையர் வாயில்வைத்து ஊதும் வேய்ங்குழல் அனற்குடிகொள்ளுதலும். அம் புவியில் - அழகிய பூமியில். அதனால் - இங்ஙனம் மெலிதலால். இளைப்பு - குறை. புலி பதுங்குதல் - உடனே பாய்தற்கு. முகில் ஒதுங்குதல் - மழைபெய்தற்கு. வில் வளைதல்- அம்பு எய்தற்கு. ஆடு போரிற் பிற்காலித்தல் - உடனே பாய்ந்து மோதுதற்கு. யானை ஒடுங்குதல் - சமயமறிந்து கொல்லுதற்கு. எருது துள்ளிவிழுதல் - பின்பு எழுந்து ஊக்கங்கொண்டு தொழில் செய்தற்கு. மூங்கில் வளைதல் - பல்லக்குக்கழை முதலியனவாகப் பயன்படுதற்கு. மேலோர் கீழோரோடு சந்திக்கு இசைதல்- பின்பு சமயத்தில் அவரை வெல்லுதற்கும், தற்காலத்தில் பெருமை பெறுதற்கும். முனிவர்கள் நயந்து கொள்ளுதல் - தவவலிமை குறையாமல் பெருமை யடைதற்கு. வலிமை மிக்க சேனை பின்னிடுதல் - சமயமறிந்து முன்னிட்டுப் பகையைவெல்லுதற்கு. தொழிலில் திறமுடையோர் அடங்குதல் - தங்கள் திறத்தைத் தொழிலிற் காட்டி மேன்மை பெறுதற்கு. தலைவர்கள் கீழ்ப்பட்டவர்க்கு அஞ்சினற்போற் காட்டுதல் - அவர்களை ஆராய்தற்கு. முதலை தலைசாய்ந்திருத்தல் - தனக்கு இரையாகும் பிராணியைத் தவறாது வவ்வுதற்கு. மகிழம்பூ உலர்தல் - மணம் மிகுதற்கு. வேய்ங்குழல் குடிபடுதல் - நன்கு பயன்பட்டு இன்னிசைதருதற்கு. "வில்லது வளைந்ததென்றும், வேழம தடங்கிற்றென்றும், வல்லியம் பதுங்கிற்றென்றும், வளர்கடா பின்னிற்றென்றும், புல்லர்தஞ் சொல்லுக்கஞ்சிப் பொறுத்தனர் பெரியோரென்றும், நல்லதென் றிருக்கவேண்டா: நஞ்செனக் கருதலாமே" என்பது விவேகசிந்தாமணிச் செய்யுள். அரனை - சிவபிரானை: வரனை எனப் பதம் பிரித்தும் உரைக்கலாம்; வரன் - சிறந்தவனான சிவபிரான். வலமது புரிந்து - பிரதக்ஷிணஞ்செய்து. மத கரிக்கு - மதம்பிடித்த யானையின் வடிவங்கொண்ட விநாயகமூர்த்திக்கு. இளைய - தம்பியான.

(57)

[தெய்வச்செயல்]

சோடாய் மரத்திற் புறவிணை யிருந்திடத்,
துறவு கண்டே வேடுவன்,
தோலாம லெய்யவேண்டுமென் றொருகணை
தொடுத்து வில்வாங்கி நிற்க,
ஊடாடி மேலே யெழும்பிடி லடிப்பதற்
குலவு ராசாளி கூட,
உயரப் பறந்துகொண்டே திரிய, அப்போ
துதைத்த சிலை வேடனடியில்
சேடாக வல்விடந் தீண்டவே அவன்விழச்,
சிலையிற் றொடுத்த வாளி
சென் றிராசாளிமெய் தைத்துவிழ, அவ்விரு
சிறைப்புறா வாழ்ந்த வன்றோ?
வாடாம லினையெலாஞ் சிவன்செயல்க ளல்லால்
மனச்செயலி னாலும் வருமோ?
மயிலேறி விளையாடு........குமரேசனே!

புறவு இணை - இரண்டுபுறாக்கள். துறவு கண்டு - (அப்புறாக்களின் உயிர் உடலினின்று) நீங்கச் செய்தலை [கொல்லுதலைக்] கருதி. தோலாமல் - தோற்காமல், குறி தவறாமல். கணை - அம்பு. வில் வாங்கி - வில்லை வளைத்து. ஊடாடி - ஊடல் கொண்டு, நடமாடி, பழகி, முயன்று: உலவு - உலாவுகின்ற, திரிகின்ற. ராசாளியென்பது - பறவைகளில் வலிய ஒன்று; இதனைப் பறவைப்புலியென்பர். உதைத்த சிலை வேடன் அடியில் - (அம்பைச்) செலுத்திய வில்லையுடைய வேடனது காலில். சேடு ஆக - நன்றாக, பலமாக. வல் விடம் தீண்ட - கொடிய விடமுள்ள ஸர்ப்பங் கடிக்க. வாளி - அம்பு. மெய் - உடல். சிறை - சிறகு. வாழ்ந்த - உயிர் பிழைத்தன. வாடாமல் - சோர்வில்லாமல், தவறாமல். மனம் செயலினால் - மனத்தின் செயலாகிய எண்ணத்தினால். 'நாமொன்றெண்ணத் தெய்வமொன் றெண்ணிற்று' என்பது உலகமொழி. ''ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்,........ எனையாளும் ஈசன் செயல்'' என்னும் செய்யுளுங் காண்க. (58)

[பாடலியல்பு]

எழுத்தசைகள் சீர்தளைகள் அடிதொடைகள் சிதையா
திருக்கவேவேண்டும்; அப்பால்,
ஈரைம்பொருத்தமொடு மதுரமாய்ப் பளபளப்
பினியசொற் கமையவேண்டும்;
அழுத்தமிகு குறளினுக் கொப்பாகவே பொருள்
அடக்கமு மிருக்கவேண்டும்;
அன்பான பாவின மிசைந்துவரல்வேண்டும்; முன்
அலங்கார முற்ற துறையில்
பழுத்துளமுவந் தோசை யுற்றுவரல்வேண்டும்;
படிக்குமிசை கூடல்வேண்டும்;
பாங்காக வின்னவை பொருந்திடச் சொற்கவிதை
பாடிற் சிறப்பென்பர்காண்.
மழுத் தினஞ் செங்கைதனில்வைத்த கங்காள னருள்
மைந்தனென வந்த முருகா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

பாடல் இயல்பு - செய்யுளுக்கு இருக்கவேண்டிய லக்ஷணம். எழுத்து - அகரம் முதலியன. அசைகள் - நேரசை, நிரையசை என்பன. சீர் - ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என்பன. தளைகள் - நேரொன்றாசிரியத்தளை, நிரை யொன்றாசிரியத்தளை, வெண்சீர்வெண்டளை, இயற்சீர்வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றா வஞ்சித்தளை, கலித்தளை என்பன. அடி - குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்பன. தொடைகள் - எதுகை, மோனை, முரண், அளபெடை, இயைபு என்பன: அந்தாதித்தொடையென்றும் ஒன்று உண்டு. சிதையாது - கெடாமல். ஈரைம்பொருத்தம் - பத்துவிதப் பொருத்தங்கள்; அவை - மங்கலப்பொருத்தம், சொற்பொருத்தம், எழுத்துப்பொருத்தம், தானப்பொருத்தம், பாற்பொருத்தம், உணாப்பொருத்தம், வருணப்பொருத்தம்; நாட்பொருத்தம், கதிப்

பொருத்தம், கணப்பொருத்தம் என்பன; இவை, நூலின் முதன் மொழியிற் பார்க்கப்படுவன. இவற்றை யெல்லாம் செய்யுளிலக்கண நூல்களில் விவரமாகக் காண்க. மதுரம் - இனிமை. பளபப்பு - பொருள் விளக்கம், தெளிவு அழுத்தம் - சொல்லழுத்தம், பொருளழுத்தம். குறள் - திருக்குறள்; திருவள்ளுவநாயனார் அருளிச்செய்தது. அன்பு ஆன - விரும்பத்தக்க. பா இனம் - பாவும், பாவினமும். பா - செய்யுள்; அவை - வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியப்பா என்பன. பாவினம் - துறை, தாழிசை, விருத்தம் என்பன. அலங்காரம் - சொல்லணியும், பொருளணியும்; சொல்லணி - பிராசம் முதலியன; பொருளணி - உவமை முதலியன. பழுத்து - முதிர்ந்து. உளம் உவந்து - மனம் மகிழும்படி; ஓசை - செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசை என்பன. உற்று - பொருந்தி. இசை - ஸங்கீதம். பாங்கு ஆக - அழகாக, முறையாக. இன்னவை - இவை. கவிதை - பாடல். மழு - ஓர் படை. கங்காளன் - தசைகழிந்த உடல்முழுவெலும்பைத் தரித்த சிவபிரான். அருள் - பெற்றருளிய.

(59)

[விபூதிதரிக்கும் முறைமை]

பத்தியொடு 'சிவசிவா!' என்று திருநீற்றைப்
  பரிந்து கையா லெடுத்துப்,
பாரினில் விழாதபடி யண்ணாந்து, செவியொடு
  பருத்த புயமீதி லொழுக,
நித்த முவிரல்களா னெற்றியி னழுந்தவுற
  நினைவாய்த் தரிப்பவர்க்கு,
நீடுவினை யணுகாது; தேகபரிசுத்தமாம்;
  சிங்கார விமல னங்கே
சத்தியொடு நித்தம் விளையாடுவன்; முகத்திலே
  தாண்டவஞ் செய்யுந் திரு;
சஞ்சலம் வராது; பாக்கி யுதவும்; இவரையே
  சத்தியஞ் சிவனென்னலாம்.
மத்தினிய மேருவென வைத் தமுதினைக் கடையும்
  மான் மருகனான முருகா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

பரிந்து - விரும்பி. பாரினில் - பூமியில். ஒழுக - சிறக்க. நித்தம் - நாள்தோறும். நினைவாய் - ஈச்வரத்தியானத்தோடு. நீடு வினை - பெரிய கர்மம். வினையென்பது, நல்வினை தீவினை யென்னும் இரண்டையுங் குறிக்கும். நிமலன் - குற்றமற்ற கடவுள், சிவபிரான். சத்தி - உமாதேவி. தாண்டவம் - நர்த்தனம். திரு - இலக்குமி. 'முகத்திலே தாண்டவஞ் செய்யுந் திரு'— முகம் ஐசுவரியக்களையோடு பொலிவுறும் என்பதாம். சஞ்சலம் - விசாரம், துயரம். பர கதி - முக்தி. இனிய மேரு - சிறந்த மேரு மலை. இனிய மேரு மத்தெனவைத்து என மாற்றுக. அமுதினை - பாற்கடலை. மால் மருகன் - திருமாலின் மருமகன். (60)

[விபூதிவாங்கும் முறைமை]

பரிதனி லிருந்தும், இயல் சிவிகையி லிருந்தும், உயர்
பலகையி லிருந்தும், மிகவே
பாங்கான வம்பலந் தனிலே யிருந்தும்,
பருத்த திண்ணையி லிருந்தும்,
தெரிவொடு கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேனின்று
திருநீறு வாங்கி யிடினும்,
செங்கையொன் றாலும் விரல்மூன் றாலும் வாங்கி
திகழ் தம்பலத்தி லேனும், [னும்
அரியதொரு பாதையி னடக்கின்ற போதிலும்,
அசுத்த நிலமான வதிலும்,
அங்கே தரிக்கினும், தந்திடற் றள்ளினும்,
அவர்க்குநர கென்பர் கண்டாய்.
வரிவிழி மடந்தை குறவள்ளி நாயகிதனை
மணந்து மகிழ் சகநாதனே!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

பரி - குதிரை. இயல் சிவிகை - (வாகனமாகப்) பொருந்திய பல்லக்கு. பாங்கு ஆன - அழகான. அம்பலம் - பலருங் கூடும்

பொதுவிடம். தெளிவொடு - அறிவோடு. திகழ் தம்பலத்தினும் - விளங்குகிற தாம்பூலம் தரிக்கும் நிலையிலும். அரியது - அருமையானது. பாதை - வழி. தள்ளினும் - சிந்தினாலும், வேண்டாமென்று மறுத்தாலும். வரி விழி - செவ்வரிபரந்த கண்கள்; வரி - கோடு. மடந்தை - பெண். சக நாதன் = ஜகந்நாதன்; உலகத்திற்குத் தலைவன். (61)

[இவ்வுறுப்பால் பயனில்லெனல்.]

தேவாலயஞ் சுற்றிடாதகா லென்ன கால்?
தெரிசியாக்கண் ணென்ன கண்?
தினமுமே நின்கமல பாதத்தை நினையாத
சிந்தைதா னென்ன சிந்தை?
மேவாகமஞ் சிவபுராணமவை கேளாமல்
விட்டசெவி யென்ன செவிகள்?
விமலனை வணங்காத சென்னி யென்? பணி-
விடைசெயாக் கை யென்ன கை?
நாவார நினை யேத்திடாதவா யென்ன வாய்?
நற்றீர்த்த மூழ்கா வுடல்
நாளில்த் தென்ன வுடல்? பாவியாகிய சனனம்
நண்ணினாற் பலனேதுகாண்?
மாவார்கி வேலைதனில் வருசூரன் மார்புருவ
வடிவேலை விட்ட முருகா!
மயிலேறி விளையாடு.........குமரேசனே!

இவ்வுறுப்பால் பயன் இல் எனல் - இந்த அவயவங்களால் பயனில்லையென்று கூறுதல். தெரிசியா - காணாத. கமலம் பாதம் - தாமரைமலர்போலுந் திருவடி. மேவு ஆகமம் - (சிறப்புப்) பொருந்திய சமயநூல். விமலன் - குற்றமற்ற சிவபிரான். சென்னி - தலை. பணிவிடை - கைங்கரியம். நா ஆர - நாக்கு நிரம்ப. நினை ஏத்திடா - உன்னைத் துதியாத. நல் தீர்த்தம் - சிறந்த

(கங்கை முதலியவற்றின்) நீர். நானிலத்து - பூமியில். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பவை நான்கு நிலங்கள். இவற்றை உடைமையால் பூமி நானிலமெனப் பெயர்பெறும். சனனம் - பிறப்பு. நண்ணினால் - பொருந்தினால், அடைந்தால். உருவ - துளைக்க, புதைந்தோட. (62)

[நற்பொருளோடு தீப்பொருள் பிறத்தல்.]

கோகநத மங்கையுடன் மூத்தவள் பிறந்தென்ன?
குலவு மாட்டின்க ணதர்தான்
கூடப் பிறந்தென்ன? தண்ணீரி னுடனே
கொடும்பாசி யுற்று மென்ன?
மாகருணு மமுதினொடு நஞ்சம் பிறந்தென்ன!
வல்லிரும்பிற் றுருத்தான்
வந்தே பிறந்தென்ன? நெடுமரந் தனின் மொக்குள்
வளமொடு பிறந்தென்ன? உண்
பாகமிகு செந்நெலொடு பதர்தான் பிறந்தென்ன?
பன்னு மொருதாய்வயிற்றிற்
பண்புறு விவேகியொடு கயவர்கள் பிறந்தென்ன?
பலனேது மில்லை யன்றோ!
மாகனக மேருவைச் சிலையென வளைத்த சிவன்
மைந்தனென வந்த முருகா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

கோகநதம் மங்கை - செந்தாமரைமலரில் வீற்றிருக்கும் பெண்ணாகிய திருமகள். பாற்கடல் கடையப்பட்ட காலத்தில் திருமகள் தோன்றுதற்குமுன்னே மூதேவி தோன்றினளென்பது, வரலாறு; அதனாலேயே, அவளுக்கு மூத்தவள் என்பது ஓர் பெயர். குலவும் - விளங்குகின்ற. ஆட்டின்கண் - ஆட்டினிடத்தில். அதர் - ஆட்டின்கழுத்தில் நீளமாகத் தொங்குகின்ற பயனற்ற தோல். உற்றும் - பொருந்தியிருந்தும். மாகர் - தேவர்கள். நஞ்சம் - விஷம். வல் இரும்பில் துரு என்று பிரித்துக் கொள்க. வல் - வலிய. மொக்குள் - புல்லுருவி என்பர். உண் -

உண்ணுதற்குஉரிய. பாகம் மிகு - சமையலுக்குச் சிறந்த. பதர் -
உள்ளீடில்லாத நெல்; வெறும் உமிக்கூடு. பன்னும் - சொல்லப்
படும். பண்பு உறு - நற்குணம் மிக்க. விவேகி - பகுத்தறிவுடை
யவன். கயவர்கள் - யாதொருநற்குணமு மில்லாத கீழ்மக்கள்.
மா கனகம் - சிறந்த பொன். சிலையென - விற்போல், வில்
லாக.

(63)

[தன்னினத்தால் அழிவு.]

குலமான சம்மட்டி குறடு கைக்குதவியாய்க்
கூரிரும்புகளை வெல்லும்;
கோடாலிதன்னுளே மரமது நுழைந்து தன்
கோத்திரமெலா மழிக்கும்;
நலமான பார்வைசேர் குருவியானது வந்து
நண்ணு பறவைகளை யார்க்கும்;
நட்புடன் வளர்ந்து கலைமானென்று சென்று தன்
நவில்சாதிதனை யிழுக்கும்;
உலவு நற்குடிகளிற் கோளர்க ளிருந்துகொண்
டுற்றாரை யிடழிப்பர்;
'உளவனில்லாம லூரழியா' தெனச்சொல்லும்
உலகமொழி நிசமல்லவோ?
வலமாகவந் தரனிடத்திலேற் கனிகொண்ட
மதயானை தன் சோதரா!
மயிலேறி விளையாடு.........குமரேசனே!

குலம் ஆன - இனமான; இரும்பின் இனமான என்க.
கோடாலி - கோடரி; கோடு அரி - மரக்கிளைகளைத் தறிப்ப
தற்கு உரிய கருவி. கோத்திரம் - வம்சம், இனம். நலமான -
நல்ல. பார்வை சேர் குருவி - பார்வைக்குருவி; வேடர் முதலி
யோர் குருவிகளைப் பிடித்தற்குத் தாம் பழக்கிவைத்துக்கொண்
டிருக்கும் குருவி; இதனைக் கண்டவளவில் மற்றைக் குருவிகள்
தம்மினம் உளதென்று அச்சந்தவிர்ந்து அதன் அருகிற் சேர்ந்
தவுடனே, அவற்றை வேடர்முதலியோர் பிடித்துக்கொள்வர்.
நண்ணு - வந்தடைந்த. ஆர்க்கும் - வேடர் வலைக்கயிற்றாற் கட்
டிப் பிடிக்கச் செய்யும்; ஆர்த்தல் - கட்டுதல். நவில் - சொல்லப்

படுகிற. உலவு - (வாழ்வுடன்) பொருந்திய. கோளர்கள் - கோட் சொல்பவர்கள், கொடியர்கள். விதலைக்குப் பிறந்த புருஷர்கள் என்னவுமாம். உற்றுர் - உறவினர். ஈடு - பெருமை, வலிமை. உளவன் - அந்தரங்கவிஷயங்களை அறிந்தவன். வலம் ஆக - பிரதக்ஷிணமாக. அரன் - சிவபிரான். கனி - இங்கு மாம்பழத்தைக் குறிக்கும். சோதரன் - உடன்பிறந்தான், ஒரு தாய்வயிற்றிற் பிறந்தவன். (64)

[கைவிடத்தகாதவர்.]

அன்னை, சுற்றங்களையும், அற்றைநாள் முதலா
அடுத்துவரு பழையோரையும்,
அடுபகைவரிற் றப்பிவந்த வொருவேந்தனையும்,
அன்பான பெரியோரையும்,
தன்னை நம்பினவரையும், ஏழையானவரையும்,
சார்ந்த மறையோர் தம்மையும்,
தருணமிதுவென்று நல்லாபத்து வேளையில்
சரணம் புகுந்தோரையும்,
நன்னயமதாக முன்னுதவி செய்தோரையும்,
நாளுந் தனக்குறுதியாய்
நத்து சேவகரையும் காப்பதல்லாது, கைந் -
நழுவவிட லாகாதுகாண்.
மன்னயிலு மினிய செஞ்சேவலுஞ் செங்கைமலர்
வைத்த சரவணபவனே!
மயில்மேலேறி விளையாடு.........குமரேசனே!

சுற்றம் - உறவினர். அற்றைநாள் - அன்றைத்தினம்; அற்றைநாள் முதலா - முதலிற் பார்த்த அத்தினந்தொடங்கி, வெகுகாலமாக; இளமைதொட்டு என்னுமாம். அடு - கொல்லுகின்ற. பகைவரின் தப்பி எனப் பிரித்துக்கொள்க. அடு பகைவர் - கொல்ல வந்த பகைவர். சார்ந்த - அடுத்துவந்த. மறையோர் - பிராமணர். தருணம் - (காத்தற்கு உரிய) சமயம். நல் ஆபத்து - கொடிய துன்பம். நல் நயமது ஆக - மிக்க இனிமையாக. முன் உதவி - செய்யாமற் செய்த உதவி; தான் ஒருதவியையும் ஒருவர்க்குச் செய்யாமலிருக்கையில், அவர் தாம் முன்பு தனக்குச் செய்த உதவி. உறுதி ஆய் - நன்மைசெய்பவனாய், பலமாகப் பொருந்தி. நத்து - விரும்பியிருக்கின்ற. மன் அயில் - சிறந்த வேற்படை;

மன் - நிலைபெற்ற எனினுமாம். இனிய - சிறந்த. சரவண பூபன் - நாணற்காட்டில் தோன்றிய தலைவன்: முருகக்கடவுள். 'அன்னை தந்தையர்களையும்' என்பதும், 'சரவண வள்ளலே' என்பதும் பாடபேதம். (65)

[நல்லோர் முறைமை.]

கூடியே சோதரர்கள் வாழ்தலாலும், தகு
குழந்தைபல பெறுதலாலும்,
குணமாகவே பிச்சையிட்டுண்கையாலும்,
கொளும் பிதிர்க் கிடுதலாலும்,
தேடியே தெய்வங்களுக் கீதலாலும்,
தியாகங் கொடுத்தலாலும்,
சிறியோர்கள் செய்திடும் பிழையைப் பொறுத்துச்
சினத்தைத் தவிர்த்தலாலும்,
நாடியே தாழ்வாய் வணங்கிடுதலாலும், மிக
நல்வார்த்தை சொல்லலாலும்,
நன்மையே வருமலால் தாழ்ச்சிகள் வரா; இவை
நல்லோர்கள் செயும் முறைமைகாண்.
வாடி மனநொந்து தமிழ்சொன்ன நக்கீரன்முன்
வந்துதவி செய்த முருகா!
மயிலேறி விளையாடு.........குமரேசனே!

சோதரர்களோடு கூடியே என்று கூட்டிக்கொள்க. தகு - தக்க. கொளும் பிதிர்க்கு - (திலதர்ப்பணாதிகளைக்) கொள்ளு தற்கு உரிய பித்ருதேவதைகளுக்கு. இடுதலாலும் - (பிண்டம் முதலியவை) அளித்தலாலும். தேடி - (பொருளைத்) தேடி. தியாகம் - வரையாது கொடுத்தல். நாடி - விரும்பி. தாழ்ச்சிகள் - தாழ்வுகள், குறைவுகள், அகௌரவங்கள். தமிழ் சொன்ன - தமிழில் திருமுருகாற்றுப்படைமுதலிய நூல்களைப் பாடிய. (66)

[அடைக்கலங் காத்தல்.]

அஞ்சலெனை நாயினுடல் தருமன் சுமந்து முன்
ஆற்றைக் கடத்துவித்தான்;
அடைக்கலமெனுங் கயற்காக நெடுமாலுடன்
அருச்சுனன் சமர்புரிந்தான்;

தஞ்சமென வந்திடு புறவுக்குமுன் சிபி
சரீரந்தனைக் கொடுத்தான்;
தடமலைச் சிறகரிந்தவனை முன் காக்கத்
ததீசி முதுகென்பளித்தான்:
இன்சொலுடனே பூததய வுடையராயினோர்,
எவருக்கும் ஆபத்திலே,
இனிய தஞ்சீவனை விடுத்தாகிலுங் காத்
திரங்கி ரட்சிப்ப ரன்றோ?
வஞ்சக் கிரவுஞ்சமொடு, தாருகன், சிங்கமுகன்,
வளர்சூர னுடல் கீண்டவா!
மயிலேறி விளையாடு........குமரேசனே!

அடைக்கலங் காத்தல் - தன்னைச் சரணமடைந்த உயிரைப் பாதுகாத்தல். அஞ்சல் என - அஞ்சாதேயென்று சொல்லி அபய மளித்து. அடைக்கலம் - சரணம். கயற்கு ஆக - கயன் என்னும் கந்தருவனுக்காக. நெடு மாலுடன் - பெருமைக்குணமுடைய திருமாலினது திருவவதாரமான கண்ணபிரானுடனே. சமர் புரிந்தான் - போர்செய்தான். தஞ்சம் - அடைக்கலம். தட - பெரிய. சிறகு - இறகு. அரிந்தவன் - அறுத்தவனான இந்திரன். முதுகு என்பு அளித்தான் - முதுகெலும்பைக் கொடுத்தான். பூத தயவு உடையர் - பிராணிகளிடத்தில் கருணையுடையவர். வஞ்சம் கிரவுஞ்சமொடு - வஞ்சனையையுடைய கிரௌஞ்சகிரியுடனே. கீண்டவா - (வேல்கொண்டு) பிளந்தவனே! நாயினுடல் தருமன் சுமந்த கதை முதலியன கேட்டறிக; விரிப்பின் பெருகும். (67)

[பெரியோரியல்பு.]

அன்னதானஞ்செய்தல், பெரியோர்சொல்வழிநிற்றல்,
ஆபத்தின் வந்தபேருக்கு
அபயங் கொடுத்திடுதல், நல்லினஞ் சேர்ந்திடுதல்,
ஆசிரியன்வழிநின் றவன்
சொன்னமொழி தவறாது செய்திடுதல், தாய்தந்தை
துணையடி யருச்சனை செயல்,